போன் நெ. 15. விலை 2 அணா REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 2—5—54 | இதழ் 44

புன்சிரிப்பால் அல்ல!

★

அந்தக் கர்ஜனை!

வீண் போகாது, என்ற நம்பிக்கை இருந்தது.

அடைந்த தொல்லைகள்

நிச்சயம், பலன் தரும் என்ற உறுதியை அதிகப்படுத்தியது.

சிந்திய இரத்தம்

ஒவ்வொரு துளியிலிருந்தும் ஓராயிரம் நல்லெண்ணத் தூதர்கள் உருவாவார்கள் என்ற இதயவேகம் இருந்தது.

ஏந்திய கொள்கை

நியாயமும் நீதியும் நிரம்பியது என்கிற தெளிவு அவர்கள் உள்ளத்திலே வழிந்தோடிற்று.

அதனால்தான்......

மேதினி எங்கும் மே தின விழா கொண்டாடப்படுகிற இந்த நேரத்தில், அந்த இன்பபூமியைப்பற்றி ஒவ்வொரு உழைப்பாளியும் எண்ணுகிறான். 'உரிமை பெறுவோம்!' என்று உரத்துக் கூச்சலிடும் பாட்டாளியின் கண்ணீரிலே, "பாருக்குள்ளே ஒரு தேசம் இருக்குதாம்! அது பாரபட்சம் காட்டாத பசுஞ்சோலையாம்! அங்கே பட்டினிப் பஞ்சம் இல்லையாம்! அதன் பெயர் ரஷ்யாவாம்!" என்

கிற எண்ணம் பளிச்சிட்டு மின்னுகிறது.

சுறாவுக்கும், சூறாவளிக்கும் இடையிலே அகப்பட்டு, காரிருளில் தவிக்கும் கலத்துக்கு, கரைக்குச் செல்லும் வழிதெரியாமல் கலங்கி நிற்கும் சமயம், கலங்கரை வெளிச்சத்தின் ஒளி தென்பட்டால், எத்தகைய உற்சாகமும் உத்வேகமும் உண்டாகுமோ, அத்தகைய மனநிலையைப் பெறுகின்றனர், உலக உழைப்பாளிகள்.

ரஷ்யா!—இந்தச் சொல்லுக்கு, ஏழைகள் மத்தியிலிருக்கும் போதரவும் அன்பும், வேறெந்த நாட்டுக்குங் கிடையாது. பூலோக சொர்க்கம்! பாலைவனத்தில் ஒரு பூஞ்சோலை! காரிருளை விலக்கிய வெண்ணிலா!—என்றெல்லாம், ஏடெழுதுவோர், வர்ணிப்பர் — பாடல் புனைவோர் உண்டு. இந்திய விடுதலை இயக்கத்தின் கவிஞர் பாரதியாரும் பாடினார்,—'ஆகா! வென்றெழுந்தது பார், யுகப் புரட்சி!' என்று. கேட்போர், கண்களில், புது ஒளி பூக்கவும்—படிப்போர் கருத்துக்களில் ஒரு பரவசம் தோன்றவும்—ஏழையின் இதயத்தில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகவும், இன்றைய தினம் ரஷ்ய பூமி, விளங்குகிறது.

அங்கு நடைபெற்ற புரட்சிப் போரை வர்ணிப்பதிலே ஒரு ஆனந்தம்! ஜாரின் மாளிகை எவ்வளவு கொடூரகோலாகல மண்டபமாயிருந்தது—அந்தக் கொட்டம் எப்படி தகர்த்தெறியப்பட்டது என்பதை எழுதுவதிலே, ஆர்வம்! அந்த நாட்டு மண்ணிலே உழைப்புக்கும் வாழ்வுக்கும் இருக்கும் தொடர்பு பற்றி வரைவதிலே ஒரு களிப்பு!—எங்கும் காண்கிறோம். இல்லாதோரிருக்குமிடத்தும் காண்கிறோம்.

அமெரிக்காவிலே ஐநூறு அடுக்கு மாடிகள் கட்டப்படுகின்றன — மேக மண்டலத்தை கையால் தொட்டு விளையாட முடியும்— என்கிற செய்தியைப் படிக்கும் போது, வியப்புமட்டுமே ஏற்படுகிறது நமக்கு! அதே நிமிடத்தில், அந்த மாளிகைக்கு யார் சொந்தக்காரன்?—எனும் பெயரைப் படிக்கும்போது, அந்த வியப்பு மறைந்து, விழிகளிலே ஒரு அருவருப்பு, அரும்புகிறது! லங்காஷயரிலே அமைக்கப்பட்டிருக்கும் ஆலையிலே நாளொன்றுக்கு இத்தனை லட்சம் கஜம், துணி உற்பத்தி செய்யப்படுகிறது—என்பதை அறியும்போது, அந்த ஆலையின் திறமையும் பெருமையும், அதன் உயரமும் உருவமும் தோன்றுகிறதே யொழிய, களிப்பு உருவாவதில்லை; காரணம், அந்த ஆலை, யாரோ ஒருவனின் சொந்தச் சொத்து — அந்த ஆலையிலே உழைக்கும் தொழிலாளி, ஒரு கஜத் துணியுமின்றி, நம்மைப் போலத்தான் உழல்வான், எனும் எண்ணத்தால். கனடாவில், கழனியிலே பிரம்மாண்டமான டிராக்டர்கள், விதையைத் தூவுவதிலிருந்து கதிரை அறுவடை செய்யும் வரையில் வேலை செய்கிறதென்னும் விபரத்தை அறியும்போது, வியக்கிறோம்—விஞ்ஞானியின் அறிவுக்கு. ஆனால், அந்தக் கழனிகள், யாரோ ஒருவனின் சுகவாழ்வுச் சோலைகள் என்று நினைக்கும்போது வியப்பு, வேதனையாகிறது! ஆனால், ரஷ்ய பூமியில், இதுபோன்ற சாதனைகளைக் கேள்விப்படும்போது, நம்மை அறியாமலே ஓர் குதூகலம், உண்டாகிறது. அமெரிக்கர் ஐட்ராஜன் குண்டு, கண்டுபிடித்து விட்டனர்!—செய்தி, கலக்கத்தை உண்டாக்குகிறது. ரஷ்யர், ஐட்ராஜன் குண்டைக் காட்டிலும் கொடுமையான நைட்ராஜன் குண்டை கைவசம் வைத்துள்ளனர் — செய்தி கலக்கத்தையல்ல; மகிழ்ச்சியைக் அள்ளித் தருகிறது.

எங்கேயோ இருக்கும் தேசம்! ஆனால், எல்லோருடைய நாவிலும் இருக்கிறது!!

என்ன காரணம்? — ஏழை அறிவான்; ஆனால் குபேரர்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை.

* * *

"ஹலோ! ஹலோ!!"

"குட்மார்னிங் சார்! ஆமாம், மானேஜர் பேசுகிறேன்"

"கையிலேயிருக்கும் சரக்கு எவ்வளவு?"

"ஸ்டாக் ரொம்ப சார். இந்த மாதத்திலே உற்பத்தியாகிற சரக்கையும் சேர்த்தால், ஸ்டாக் நிறைய இருக்கும்."

"அப்படியா?"

"ஆமாம் சார்!"

"சரி—சரக்குக்கு கிராக்கி வரும் வரையில், உற்பத்தி செய்ய வேண்டாம். ஆட்களை, குறை! உற்பத்தியைக் குறை!!"

*

விளைவு, பலர் வேலையிழக்கிறார்கள்! ஆலையரசர்கள், எப்போது விலை ஏறும், என்று மோப்பம் பிடித்தபடியிருக்கிறார்கள். உற்பத்தியைக் குறைப்பதால் அவனுடைய வாழ்க்கை வளத்திலே எள்ளளவும் வளைவு நெளிவு இருக்காது. உல்லாசமும் குதூகலமும் எப்போதும் இருக்கும். அதே நேரத்தில் வேலையிழந்த தொழிலாளர்களின் வயற்றில், பசி இருக்கும்! ஐயயோ — என்ற அழுகுரல் மிஞ்சம்!!

*

"ஹலோ!"

"ஏன்?"

"எவ்வளவு சரக்கு இந்த மாதம் உற்பத்தியாகியிருக்கிறது?"

"போன மாதத்தைப் போல் இரண்டு மடங்கு"

"அப்படியா?"

"ஆமாம்! வந்துபாருங்கள்!!"

"ரொம்ப சந்தோஷம். உங்களுக்கு, 'ஸ்டாலின்' மெடல் வழங்கும்படி சர்க்காருக்குத் தெரிவிக்கிறேன்"

*

அதிக உற்பத்திசெய்த ஆலைக்குப் பரிசு, கிடைக்கிறது! ஆலைத் தொழிலாளிக்கு 'ஸ்டாலின்மெடல்' வழங்கப்படுகிறது!! அவன், அதனைக் காட்டிப் பேரானந்தப்படுகிறான். குதூகலம், கொள்ளுகிறான். இன்னும் அதிகமாக உற்பத்தி செய்து, தன்னுடைய பெயரை நிலைநாட்டிக்கொள்ள வேண்டுமென்று, ஆசை அதிகமாகிறது அவனுக்கு.

* * *

இந்த முரண்பாடுகள், இங்கு மங்கும்! முதலாளித்வம், அதிகஉற்பத்தியைக் கண்டு அஞ்சுகிறது—எங்கே தன்னுடைய வியாபாரம் மந்தமாகி,

இலாபம் சுருங்கிவிடுமோ எனும் கலக்கத்தால் உற்பத்தியைச் சுருக்கி, தொழிலாளர்களைத் தெருவில் அலைய விடுகிறது! ஆனால், பொதுவுடைமையோ அதிக உற்பத்தியைக் கண்டு ஆனந்தம் கொள்கிறது—தன்னுடைய மக்களுக்கு அதிகமான வசதியை அளிக்கமுடியும் என்ற அகமகிழ்ச்சி கொள்கிறது.

மக்களின் வாழ்க்கையை வளமாக்கவேண்டும் — இது பொதுவுடைமைத் தத்துவம்.

இலாபம் இருந்தால், உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் — இது, முதலாளித்துவ முறை.

முதலாளித்துவ முறையில் முரண்பாடுகள் அதிகம். உதாரணத்துக்குக் குறிப்பிட்டோம் — இந்த உற்பத்தி விஷயத்தை.

அந்த முரண்பாடுகளை நீக்காமல் அவர்களுக்குப் பின்னேடும் பிள்ளையாகயிருக்கும் அரசை, மக்கள் எப்படி விரும்புவர்? போக போக்கியம் மாளிகையிலே குவிந்து கிடக்கும்போது, அதனைக் காணும் ஏழை என்ன எண்ணுவான்! என்னுடைய உழைப்பிலே விளைந்த சொத்து—இதனை, அவன் அனுபவிக்கிறான்; நான் தொடவும் முடியவில்லை—என்று நினைக்கும்போது, இந்த நிலையை வளர்க்க விரும்பும் ஆட்சியிடம் ஆனந்தமா காண்பான்?

என்று ஒழியும் இந்த ஆட்சி? அங்கே இருப்பதுபோன்ற சுக ஆட்சி எப்போது மலரும்!—என்றே நினைப்பான்.

இத்தகைய நினைப்பால், அவனது கருத்தில், நிலை பெற்று, அவனுடைய இலட்சிய பூமியாகிறது — ரஷ்யா.

அங்குள்ள அரசு—அது மக்களை நிர்வகிக்கும் முறை — ஆலைகள் இயக்கப்படும் விதம — அங்கு எவ்வளவு சரக்கு உற்பத்தியானாலும் கவலைப்படாதோர் இல்லாததன் இரகசியம் — பணத்துக்குள்ள மதிப்பு — கஷ்டமில்லா வாழ்வு, இவைகளைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கிறான். விஷயங்கள் புரிகிறதோ, இல்லையோ, அது வேறு விஷயம்! ஆனால், அங்குள்ள மனிதன் மனிதனாகவே வாழ முடிகிறது! — என்பதை நன்றாக அறிகிறான்.

அரசனால், அதுபோல தானும், தன்னுடைய நாட்டிலுள்ள மக்களும் வாழவேண்டுமெனும் ஆசை கொள்கிறான். அப்போது, அவன் உள்ளத்திலிருந்து, 'வாழ்க, ரஷ்யா!' எனும் முழக்கம் வெளியாகிறது—அது, ஏழை பங்காள நாடு எனும் எண்ணம் மலர்கிறது—இன்றில்லாவிடினும் ஒரு நாள் அதைப்போல தன்னுடைய நாடும் ஆகவேண்டும் என்று அவா கொள்கிறான். அதனால், அந்த பூமியைப் பாராட்டுகிறான்—அத்தகைய பூமியை உண்டாக்கிய கட்சியை—அதன் தலைவர்களை—வாயார, மனமார வாழ்த்துகிறான்—வணங்குகிறான்.

*

நீண்டு பரந்துகிடக்கும் நிலத்தை, தன்னுடைய சொந்தச் சொத்தாக்கி ஆயிரம்பேர் அதிலே உழைக்க, மாளிகையிலே தானொருவன் மட்டும் அமர்ந்து கொண்டு, அவர்கள் உழைத்ததை உறிஞ்சி வாழும் மனிதக் கூட்டம், எல்லா நாடுகளிலும் இருப்பதுபோல், அன்றோர் நாள், ரஷ்ய மண்ணிலும் இருந்தது! அவர்களின் அரசனாகயிருந்தான், ஜார்மன்னன் அவனது பிடியும், தடியடியும் தந்த வேதனைகள், ஏராளம். அவைகளைக் கண்ட மக்கள், 'இந்த அரசன் ஒழியானா?' என்றே எண்ணினர். ஆனால், அந்த மக்களின் உணர்ச்சியைத் தூண்டி ஜாரின் கொடுமையைத் துடைக்க முன்வந்த வீரர்கள், ஜாரை ஒழித்துவிட்டு, புது அரசு அமைத்தால் போதுமென்ற அளவோடு இருந்துவிடவில்லை, அந்தப் புது அரசு எப்படியிருக்கவேண்டும் என்பதையும் தீர்மானமாக வரையறுத்திருந்தார்கள்.

மார்க்ஸின் மனதிலே வளர்ந்த அந்தப் புது அரசின் கோட்பாடுகளை, தமது உள்ளத்தில் ஏற்றி, அதுபோலத் தம்முடைய நாட்டையும் ஆக்கவேண்டுமெனும் ஆசையோடு மாவீரர்கள் லெனினும் ஸ்டாலினும் போராடினார்கள். புது அரசை நிறுவப்போகிறோம்! உண்மையிலேயே அது ஓர் புது அரசு!—சமுதாயத்தை நெடுங்காலமாகக் குழப்பிவரும் பிரச்னைகளை முறியடித்து, புதுயுகம் பூக்கச் செய்யும் அரசு! அந்த அரசை நாங்கள் ஏற்படுத்திவிட்டால், எல்லோரும் சுகமாக வாழ்வர்—புலி வாழும் பூந்தோட்டம் மனிதர்கள் உலவும் பூமியாகும்!—என்ற பேரானந்தமோடு பணிபுரிந்தனர்.

அத்தகைய உள்ள உறுதியும், எடுத்த காரியம் நிச்சயம் வெற்றி பெறும் என்ற திண்ணமும் இருந்த காரணத்தினால்தான், கர்ஜனை எழுப்பினர்! — அது, வீண் போகாது என்ற நம்பிக்கையும் கொண்டனர்.

அவ்வண்ணம் கர்ஜனை எழுப்பிய போது, காட்டாட்சியினர், தாக்கினர்—தொல்லைகளை வீசினர் ஆனால், துவளவில்லை! எடுத்த பணி. ஒரு புனிதப்பணி என்பதால், மென்மேலும், நம்பிக்கை அதிகமாயிற்று.

அரசின் தர்பாரால், அவர்களுடைய தோழர்களின் இரத்தம் சிந்திற்று. மண்ணில்! சிந்தாகுலம் கொள்ளவில்லை— ஒவ்வொரு துளியிலிருந்தும் ஓராயிரம் நல்லெண்ணத்தூதர்கள் உருவாவார்கள் என்கிற உத்வேகம் மூண்டது, உள்ளத்தில்.

கர்ஜனை—நம்பிக்கை—நெஞ்சுறுதி — இத்தனையும் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது, எடுத்த பணி, நியாயமும் நீதியும் நிரம்பியது என்கிற தெளிவு அவர்கள் உள்ளமெல்லாம், நிறைந்து கிடந்ததுதான்.

யார் மறுக்கமுடியும்? பறவைக்கூட்டம்கூட வேற்றுமையற்று உலவும்போது, ஆறறிவு படைத்த மனிதன் தனக்குள்ளேயே ஆண்டானென்றும் அடிமையென்றும், பெரியவனென்றும் சிறியவனென்றும் பேதம் பிரித்து, பிளவுகளை உண்டாக்கி, அடித்துக்கொண்டு சாவதை ஒழிக்க வேண்டும், என்ற எண்ணத்தைப் புனிதமான தல்லவென்று, புல்லர்களைத் தவிர, வேறுயார் கூறமுடியும்? அதனால் தான் அந்த மாவீரர்கள், தடைகள் பல வந்தபோதும், படைகள் பல தடுத்தபோதும், பயம் எதுவுமின்றி—வீரக்கர்ஜனையிட்டு, வெற்றி முரசு கொட்டினர்!

அந்த வெற்றி முரசின் முழு வடிவம்தான், இன்றையரஷ்யா. அதனை ஏழையும் பாட்டாளியும் எண்ணிப் பார்க்கும்போது, அவனை அறியாமலே ஒரு ஆனந்தம் ஏற்படுகிறது.

"ஏன் நான் கஷ்டப்படுகிறேன்?"

"கடவுள்விட்ட வழி!"

"உழைத்தும் உலர்கிறேனே, ஏன்?"

"அது, உன் தலை விதி!"

"எனக்கு விமோசனமே இல்லையா?"

"உண்டு. இம்மையில் ஈசனைத் துதி! அடுத்த பிறப்பிலாவது சுகம் கிட்டும்!"

இதுபோன்ற போதனைகளைக் கேட்டுப் பழக்கப்பட்டுக் கிடந்த பாட்டாளிமகன், கண்முன்னே, தன் போன்ற மனிதன், களிநடனம் புரியும் நாடொன்றைக் காண்கிறான்! அந்த நாட்டின் திட்டங்களைப்பற்றி அறியும்போது, அங்குள்ளோர் சென்ற அதே வழியில் தானும் தன்னுடைய சகாக்களும் சென்றால் அதுபோன்ற புதுவாழ்வைப் பெற முடியும் என்ற நம்பிக்கையைப் பெறுகிறான்.

இந்த நம்பிக்கையை, நலிந்தோரிடம் பூக்கச் செய்த புது உலகம் ரஷ்யா! அதனால்தான், அதன் சுக துக்கங்களில் தன்னுடைய சுக துக்கமும் ஒட்டியிருப்பதாக நியுயார்க் பஞ்சாலைப் பாட்டாளியும், மலேயா காடுகளில் உழைக்கும் ரப்பர் தொழிலாளியும், லண்டன்மாநகரத் தோட்டிமகனும், உலகெங்குமுள்ள ஒவ்வொரு ஏழையும் எண்ணுகிறான்.

இத்தகைய எண்ணப் புரட்சிக்கு, வித்தூன்றிச் சென்ற வீரர்கள், எப்போதும் இருப்பார்கள். அந்த வரிசையில் வைத்துப் பார்க்கும்போது, உலக ஏட்டின் ஒவ்வொரு

போகிற போக்கில்!

[செந்தேள்]

அடடா! வந்தாலும் வந்தார் இந்தக்காமராஜர்—'அவாளு'க்கு ஏற்பட்டிருக்கும் வயிற்றெரிச்சலுக்கு அளவேயில்லை! பாருங்களேன், இந்த 'மித்திரன்' ஏட்டில் என்னென்ன செய்திகள் வருகின்றன. பி. டி. ராஜன் ராமேஸ்வரத்தில் பேசும்போது கூறினாராம், "நல்ல முறையில் ஆட்சி நடைபெறவில்லையென்றால், காமராஜர் மந்திரி சபையை விரட்டியடியுங்கள்" என்பதாக. அதற்கு மக்கள் கரகோஷம் செய்தார்களாம். கரகோஷம் என்பதை, மறந்துவிடாது எடுத்துப் போட்டிருக்கிறது! ஆச்சாரியார் ஆட்சியில் இதுபோன்ற பேச்சுகளுக்கு எத்தனைமுறை கரகோஷம் செய்திருப்பார்கள், மக்கள். எடுத்துப் போடும் எண்ணம் வந்ததா?

*

இன்னொரு செய்தி—விருதுநகரிலிருந்து. தலைப்பு 'பலத்த விவாதத்துக்கிடையில் பாராட்டுத் தீர்மானம் நிறைவேறியதாக.' உள்ளே செய்தியைப் படித்தால், பலத்த விவாதம் எதுவும் நிகழ்ந்ததாக இல்லை! மாறாக, விருதுநகர் நகரசபை, முதலமைச்சராக வந்த காமராஜரை ஏகமனதாகப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது! செய்தியைப் படிக்காமல், தலைப்பை மட்டும் படித்துவிட்டு பத்திரிகையை வீசிப் போடுவோர் எத்தனை பேரிருக்கிறார்கள்? அவர்கள் வரையிலுமாவது பிரச்சாரம் போகட்டுமே—எனும் அற்ப ஆசை.

*

இந்த அற்ப ஆசை, ஏடுகளுக்கு மட்டுமல்ல, ஆச்சாரியாருக்கும் அதிக அளவில் இருக்கிறது! நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடப்பதாகக் கூறப்பட்டதல்லவா? அவர் அண்மையில் பத்திரிகைகளில் அறிக்கையொன்று விடுத்திருந்தார்—தன்னைச் சந்தித்து ஆலோசனைகள் பெறப்பலர் வருவதாகவும், தன்னுடைய உடல்நிலை அதற்கு இடம் கொடுக்காததால், தான் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றமுடியாமலிருப்பதாகவும், அதற்காகத்தன்னை மன்னிக்குமாறும் கேட்டுக்கொண்டு. உண்மைதான்! நோய்வாய்ப்பட்டவரிடம் அதிக நேரம் பேசிச்சங்கடத்தையும்சஞ்சலத்தையும் உண்டாக்குவது, கூடாதுதான். ஆனால், அவ்வண்ணம் அறிக்கை விட்டாரேயொழிய, அவர் என்ன செய்திருக்கிறார், தெரியுமோ?

*

கிண்டி ராஜபவனத்துக்குப் போனாராம்! துணி விசாரணைக் கமிஷன் கமிட்டி மெம்பர்களைச் சந்தித்து, நீண்டநேரம் விவாதித்தாராம்! மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குச் சென்று பர்மாவிலிருந்து வந்த பிரதம மந்திரி நூவை, வரவேற்று, உபசரித்தாராம். பேசவும் சக்தியற்றவருக்கு, இந்தக்காரியங்களைச்செய்ய எப்படி பலம் வந்தது? பொதுமக்கள் கேட்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில், 'இந்து' ஏடு பெரியதொரு படத்தைப்போட்டு ஆச்சாரியார் பர்மியப் பிரதமர் சந்திப்பை வெளியிட்டிருக்கிறது! பிரதமரைச் சந்தித்தது, ஆச்சாரியார்மட்டுமல்ல, காமராஜரும்தான்.

ஆனால், 'இந்து' போட்டிருக்கும் படத்தில் காமராஜர் இல்லை! ஆச்சாரியார்மட்டும்தான்!!

*

ஆச்சாரியாரின் புத்திரர்களில் C. R. நரசிம்மன் என்பவர், ஒருவர். இப்போது பார்லிமெண்டு உறுப்பினராக இருக்கிறார். அவரது மேதாவிலாசம் பற்றி, ஒரு செய்தி—இதோ! ஏப் 25-ந்தேதி டில்லிப்பார்லிமெண்டில், இந்திபற்றி, கண்டன மாரி குவிந்ததாம். அப்போது பேசிய கக்கன் என்னும் காங்கிரஸ் உறுப்பினர் 'தமிழன்' என்று குறிப்பிட்டுப் பேசினாராம். அதைக் கேட்ட புதுக்கோட்டை வல்லத்தரசு, பொங்கி எழுந்தாராம்! 'தமிழன் என்று எப்படிக்கூறலாம்? 'ன்,' என்பது நம்மை இழிவுபடுத்துவதாகவல்லவோ இருக்கிறது. தமிழன் என்பதற்குப்பதில், தமிழர் என்று கூறவேண்டும்,' என்றோர் பிரச்னையைக் கிளப்பினாராம். சபை திகைத்ததாம்! அப்போது நரசிம்மன் எழுந்து, "நாம் இந்தியன் என்று சொல்கிறோமேயொழிய, இந்தியர் என்று சொல்லிக்கொள்வதில்லை. ஆங்கில மொழியில், இந்தியன் என்று சொல்வதே சரி. ஆகவே, தமிழன் என்று சொல்வதும் சரி," என்றாராம்.

★

பக்கங்களிலும், ஒவ்வொருவர் பெயரைப் பார்க்கிறோம். அமெரிக்கா ஒரு ஐசுவரிய பூமி—ஆனால், அங்கும் ஒரு இலட்சிய வீரன், தோன்றினான். அந்த, ஆபிரகாம் லிங்கனை, உலகம் மறக்காது, இனி! பிரான்சின் சரித்திரத்திலே மூளைத்த ரூஸோ, வால்டேர், ஏடுபடித்தோரின் எண்ணங்களை விட்டு அகலார்! இங்கிலாந்தில் உரிமைக்காக உயிரையிழந்த லாட்டிமர், ரிட்லி, உரிமைமுழக்கமிட்ட ஜான்ஹாம்டன்—இவர்கள் ஒவ்வொருவரும் வளரும் சரிதத்தில், தங்களுடைய பெயரைப் பொறித்துக்கொண்டிருக்கிறார்கள். சாக்ரடீஸ்! சன்யாட்சன்! கமால்பாட்சா! —மக்களின் வாழ்க்கை எனும் கறைபடிந்த ஏட்டினைச் சுத்தப்படுத்துவதற்காக, இவர்களில் ஒவ்வொருவரும், ஒவ்வோர் வகையில் முயன்றிருக்கிறார்கள். ஆனால், அவர்களைவிட, அவர்கள் சாதிக்காததைவிட, மாபெரும் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவர முயன்ற பெருமை — கார்ல் மார்க்சையும் அவனது தோழன் எங்கெல்சையும், செயல் வீரர்கள் லெனினையும் ஸ்டாலினையுமே சாரும்.

எனவேதான், இந்த இரண்டு மாவீரர்களின் பெயர்கள், மக்கள் எல்லோருடைய கவனத்திலும் இருக்கின்றன—அவர்கள் பெயரைக் கேட்கும்போது, ஒரு பெருமிதமும் ஏற்படுகிறது.

பொது வாழ்க்கையில், தியாகம், என்பது விடுதலை வீரர்களின் சொந்தச் சொத்தாகும்! அரசியல் விடுதலையோ, சமுதாய விடுதலையோ பொருளாதார விடுதலையோ—எதுவாயினும், அந்த முயற்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து, தியாகம் பல புரிய திடமனது கொண்டோரின் நினைவுதான், உலக ஏட்டின் பக்கங்களில் என்றும் இருக்கும்,

இத்தகைய கஷ்டநஷ்டங்கள், என்றும் வீண்போகாது!—இயேசு, சிலுவையில் அறையப்பட்டதன் விளைவாகத்தான் அவருடைய எண்ணங்கள் வெகுவேகமாகப் பரவின. துரோகிகள் கொணர்ந்தது விஷம் என்று தெரிந்தும் மகிழ்ச்சியுடன் ஏந்திக் குடித்ததால்தான், சாக்ரடீஸ் கர்மவீரர் ஆனார்! தான் செல்லும் பாதையில் கனிரசமும், சுகபோகமும் இருக்காதென்பதை அறிந்தும் கானகவாசம் மேற்கொண்டதால்தான், புத்தர், ஒரு பொன்னொளியானார்!! கல்லடிக்கும் சொல்லடிக்கும் ஆளாகியும் கைக்கொண்ட கருத்தைவிடாமல் பாடுபட்டதால்தான், முகம்மது நபிகள், வெற்றி கண்டார்!

பொதுமக்கள் பிரச்னையில் புது ஒளி காணப் புறப்படுவோர், தாங்கிக்கொள்ளும் தியாகத் தழும்புகள் வீண் போகா. பொது வாழ்வில், அதிலும் புதுவாழ்வு காணப் புறப்பட்டு வெற்றிகண்ட வீராதி வீரர்களாம் ரஷ்யத் தலைவர்கள், ஏற்க வேண்டியிருந்த தியாகத் தழும்புகள், ஏராளம்.

அத்தகைய தழும்புகளை அவர்கள் ஏற்றபோது, துவளவில்லை! கர்ஜனையிட்டார்கள்!! — கர்ஜனை வீண் போகாது என்ற நம்பிக்கை இருந்தது.

அடைந்த தொல்லைகள் ஏராளம்! அவை நிச்சயம் பலன் தரும் என்ற உறுதியை அதிகப்படுத்தியது.

சிந்திய இரத்தம்! — துளி ஒவ்வொன்றும் நல்லெண்ணத்தூதர்கள் பலரை உருவாக்கும் என்கிற உள்ளத்திடம் இருந்தது.

அத்தகைய உள்ளத்திடம் உண்டாகும் வகையில், அவர்கள் எடுத்த கொள்கையில், நீதியும் நேர்மையும் நிறைந்துகிடந்தது—எனவே, நீதிக்காகப் போரிடுகிறோமெனும் உள்ளத்தூய்மையால், எதுவரினும் ஏற்போம் என்று துணிந்து நின்றார்கள்—வெற்றியும், கண்டார்கள். இன்று அந்த வீரபூமியை, விழியில் புது ஒளியோடு, காணுகின்றோம், நாம்! புதுயுகம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் படைவரிசை, நம்பிக்கை நட்சத்திரமென நம்புகிறது, ரஷ்யாவை! அந்த ரஷ்யாவிலும், 'பெட்ரோவ்'கள் இல்லாமலில்லை, இங்கிருக்கும் 'நடதூர் நண்பரை'ப் போல. 'அமெரிக்க மெகார்தி'யின் குணம் இல்லாமலில்லை — 'பெரியா'வைக் கொலைசெய்யும் குணம் உண்டானதைப்போல. ஆனால் இந்தக் குறைகள், நிலாவைச் சுற்றியிருக்கும், சிறுபுள்ளிகள்போலாகி, ஏழை மகனின் கண்ணிலும் கருத்திலும் எட்டாததற்குக் காரணம், ரஷ்யா வகுத்துச் சென்ற புதுப்பாதைதான்! ஏழையும் இல்லாதவனும், பாட்டாளியும் பரதேசியும், மனிதனாக மாறி வாழும் காட்சிதான்!! இந்த உண்மையை அறியாமல், உயரமான மாடியிலே உல்லாசமாக வீற்றிருக்கும் அமெரிக்காவும் அவர்தம் அடிவருடி நாடுகளும், புன்சிரிப்பை அள்ளி வீசி, பிறநாடுகளைத் தத்தம் வழியில் சேர்த்துக்கொள்ளலாமென்று திட்டம் போடுகின்றன. அதன் விளைவாக, உலக அரங்கில், அமெரிக்கா ஆடிடும் 'நாட்டியம்' வெகு கோரமாகயிருந்து வருகிறது! அனுதினமும், அது வகுக்கும் வழிகளும், விடுக்கும் அறிக்கைகளும், சிருஷ்டிக்கும் வேதனைகளும், விசித்திரமாயிருந்துவருகின்றன!

புதுமார்க்கம் கண்டு வெற்றி கண்ட பூமியைத் தமது பணபலத்தால் வீழ்த்திவிட வேண்டுமெனும் முயற்சியில் அமெரிக்க பூமி, பல ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

பணக்குவியல்! படைபலம்! மற்ற நாட்டு அரசுகளுடன் உறவு!—இவ்விதம், தன்னுடைய கூடாரத்தை வலிவுள்ளதாக்கும் முயற்சியினைத் தீவிரமாகச் செய்துவருகிறது. இந்த முயற்சிக்கு, ஆங்காங்கிருக்கும் பற்பல நாடுகளும், ஒத்துழைக்கின்றன. அவர்கள் ஒத்துழைப்பைத் திரட்டி பீரங்கிபலத்தால் வெற்றி காணலாமென்று படாதபாடுபட்டு வருகிறது. இதன் உச்சகட்டமாக, ஐட்ரஜன் குண்டினைப்போட்டு, அலறடித்திருக்கிறது!

ஆனால், இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் மீதுள்ள எரிச்சலை, உலக பாட்டாளிகளிடம் அதிகமாக்கியிருக்கிறதேயொழிய, வேறில்லை.

இந்த உண்மையை ரஷ்யத்தலைவர் மாலென்கோவ், தெளிவாக அறிந்துகொண்டிருப்பதாலேயே இரண்டோர் தினங்களுக்கு முன் வீராவேசத்துடன் அறிவித்துள்ளார், "எங்களைத் தோற்கடிக்க யாராலும் முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஐட்ரஜன் குண்டை அமெரிக்கா வீசினால், அதே முறையில் தாக்க எங்களுக்கும் தெரியும்! அப்படியொரு

காலம் வருமேயானால், முதலாளித்துவமே அடியோடொழிந்துபோகும்!!”

வீர உணர்ச்சியோடு, விளக்கியுள்ளார், ரஷ்யத் தலைவர்.

ஏனெனில், தமது பக்கம் இருக்கும் கொள்கைகள், மனிதனை, மனிதனுக்குவதாக—ஆகவே, என்றும் அதற்கு வீழ்ச்சியில்லை—என்ற நெஞ்சத்து உறுதி இருக்கிறது.

இந்த உறுதியால்தான், மாவீரர்கள் லெனினும் ஸ்டாலினும்தளராத முயற்சியுடன், இரத்தம் சிந்த நேரிட்டபோதும், தியாகத் தழும்புகளை ஏற்றபோதும், வீரக்கர்ஜனை எழுப்பினர்.

கர்ஜனை, காற்றிலே போய்விடவில்லை! கனவை நினைவாக்கியது!! காரணம், எடுத்தகொள்கை,குடிசைபுரியின் வாழ்வை நிமிர்ப்பது.

இந்தப் பொது உண்மையை இந்த ஆண்டு மேநாளில், நாம்அறிய வேண்டும்.

புதுயுகம் கண்ட ரஷ்யத்தலைவர்கள் ஈடுபட்ட மாபெரும் பணியில் தான், நாம் பங்கு கொண்டிருக்கிறோம்.

அவர்களைப் போலவே, நாட்டின் விடுதலைப் போருக்குக் கண்ணீரையும் செந்நீரையும் காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய கர்ஜனை — குறையவில்லை; தேயவில்லை.

நமக்கேற்படும் தொல்லைகள் — நமது உணர்ச்சியை குன்றச் செய்யவில்லை; மாறாக வளர்க்கிறது.

நம்முடைய இரத்தம்! — வீண் போகவில்லை. மாறாக, ஒவ்வொரு துளியிலிருந்தும் ஓராயிரம் வீர மணிகள் தோன்றுகிறார்கள்.

நம்முடைய கொள்கை நீதியும் நேர்மையும் நிரம்பியது!—எனவே, நம்முடைய் குரல் நாளுக்குநாள், தீரமாக ஒலிக்கிறது.

இந்த உண்மையை உணர்வோம், இந்த மே நாளில்!

திராவிடர் — முழுமையுமே — மே விழா கொண்டாடக் கூடிய, பாட்டாளிகளின் நாடி வீடுதான்.

இன்று பாசறையாக இருக்கும் இந்த பூமி, நாளை — இல்லேல் — என்றோ ஓர் நாள்; இன்ப பூமியாக விளங்கத்தான் போகிறது!

அந்நாளைக் காண, படைவரிசைகளைத் தயார் செய்வோம்! பார்புகழும் புதுயுகம், காண்போம்!!

இச்சகம் பேசி, பாசவலை வீசும், ‘அமெரிக்கா’க்கள் இருக்கும் உண்டு. வீசும், புன்சிரிப்பால் பூத்துவிடாது புதிய தாயகம்! தியாகத் தழும்புகள் தேவை!!

அத்தகைய தழும்புகளை உடம்பில் ஏற்றிக்கொண்டு வரும் நாம், வீரமுழக்கம் செய்வோம் — முதலாளித்துவம் ஒழிக! ஆதிக்க வேட்டை, அழிக! மலர்க, சமதர்மம்! வளர்க, அறிவு மணம்!

★

‘லட்சுமிகாந்தன்’ செயல்

பாராட்டத்தான் வேண்டும்!— அன்பர் நேருவின் பார்லிமெண்டரி காரியதரிசியாயிருக்கும் அம்மை லட்சுமிமேனன் மறக்காமல், ‘ஊர்ஜிதம்’ செய்திருக்கிறார்—எவ்வளவு உள்ளத் துணிவு வேண்டும்! அதுவும், அந்தச் செய்தியை ஊர்ஜிதம் செய்ய!!

‘ஊர்ஜிதம் செய்தபோது’ அம்மையாரின் முகம் எப்படி இருந்ததோ! அறிந்துரைப்போர் யாருமில்லை — ஆகவே, ‘இப்படித்தான் இருந்திருக்கும்’ என்று யூகித்துக்கொள்வோம்.

அந்தச் செய்தியை ‘ஊர்ஜிதம்’ செய்தபோது, புன்சிரிப்பு மலர்ந்திருக்குமோ?—இருக்காது! களிப்பு தென்பட்டிருக்குமோ கண்களில்?— முடியாது! குரலில் மிடுக்கு தொனித்திருக்குமோ? — நிச்சயம் முடியாது!

செய்தி, சாதாரணமானதல்ல. முகத்தைக் கவிழ்த்துக்கொள்ள வேண்டிய செய்தி! வெட்கப்பட்ட சம்பவம்! அந்தச் செய்தியை ‘ஊர்ஜிதம் செய்தபோது’ அம்மை லட்சுமியின் அகத்தில் ‘இப்படிப்பட்ட கும்பலில் நான் சேரவேண்டும்? என்னை நிராதரவாக விட்டுவிட்டுப் போய்விட்டாரே இந்த நேரு! எவ்வளவு வெட்கமாயிருக்கிறது பார்லிமெண்டில் பதில் கூற’ என்ற வேதனை இல்லாமலிருந்திருக்காது.

*

‘லட்சுமிகாந்தன்’ எனும் நாடகத்தில், காலணா இல்லாத கதாநாயகன், பாங்கியொன்றை ஆரம்பித்து பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை ‘அபேஸ்’ செய்வான் — பணத்தைக் கொடுத்த பலர், நாடகமேடையில் வந்துநின்று, விழிப்பர் அப்போது, கொட்டகை, அதிரும், எத்தனிடம் ஏமாந்த சோணகிரிகளாக, அவர்கள் விழிப்பதைப் பார்த்து! வேலைக்கு ஆசைப்பட்டு அட்வான்ஸாக ரூ 500 தந்து அதனையும் இழந்து அய்யய்யோ!—என்று கதறுவான், ஒரு பட்டதாரி. பணத்தைக் கட்ட வந்தபோது அவன் பேசிய பேச்சும், வீசிய வீச்சும் — ஏமாந்துபோன பிறகு விழிக்கிற விழிப்பும், ரசமான நகைச்சுவையாயிருக்கும், காண்போருக்கு! டில்லி நாடகத்தில், அவ்வண்ணம், பணத்தை இழந்தவனின் பாத்திரம் தாங்கவேண்டிவந்தது லட்சுமிமேனனுக்கு! யாரிந்த லட்சுமி? என்று கேட்காதீர்கள்! நாமறியோம்—வகிக்கும் பதவியைப் பார்க்கும்போது நேருவுக்கு வேண்டியவர் எனத் தெரிகிறது! அவ்வளவுதான்!!

*

ஐந்தாண்டுத் திட்டம்போட்டு அதுபற்றி எல்லோரும் சிரத்தை காட்டவேண்டுமென, அனுதினமும் கர்ஜிக்காத காங்கிரஸ் தலைவர் இல்லை. கோடிகோடியாக பணத்தை ‘செலவழிக்கும்’ திட்டங்கள் பல

உண்டு, ஐந்தாண்டுத் திட்டத்தில்! அவ்விதம் செலவழிக்க முடிவுசெய்திருக்கும், 'தீனபந்து'களின் ஆட்சியில்தான், லட்சுமிமேனன், 'ஊர்ஜிதம் செய்த' சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இலண்டனில் ஒரு கம்பெனியாம்! அது ரூ. 2,27,000 ரூபாயை, 'ஏப்பம்' விட்டிருக்கிறது!! அந்தத் தகவலை, பண்டித குன்ஸ்ரு, பார்லிமெண்டில் வெளியிட்டாராம். 'உண்மைதான்' என்று மந்திரியாசனத்தில் அமர்ந்திருந்த வெளிநாட்டிலாகா பார்லிமெண்டரி காரியதரிசி லட்சுமி அம்மை 'ஊர்ஜிதம்' செய்தாராம்.

*

கோடிக்கணக்கான மக்கள் குந்த இடமில்லாது அலைந்தாலும், தன்னுடைய 'கித்தாப்பைக் காட்டிக்கொள்வதில் சளைக்காத நேரு, இலண்டனில், இந்தியாவுக்கென்று ஒருவீடு வாங்க முடிவு செய்தாராம். அதன்படி இலண்டன் ஏடுகளில், 'வீடு தேவை' விளம்பரம் செய்யப்பட்டதாம்! பல கமிஷன் ஏஜண்டுகள், தாங்கள் நல்ல வீடு பார்த்து வாங்கித் தருவதாக வந்திருக்கின்றனர். அவர்களில், ஒரு சம்பெனியாரைப் பிடித்து, தேர்ந்தெடுத்தனராம்! தேர்ந்தெடுக்கும் திறமைக்கு அத்தாட்சியைப் பாருங்கள்—அந்தக் கம்பெனி நபர் ஆச்சரியப்பட்டுப் போயிருக்கிறான், எவ்வளவோ 'பெரிய' கம்பெனிகள் பல இருந்தும், தன்னை நம்பி தேர்ந்தெடுத்தார்களே என்று! வியப்பு ஏற்படாமலிருக்குமா அவனுக்கு—கம்பெனியே அவன் சட்டைப் பையிலும் 'லெட்டர் பேபரிலும்' தான் இருந்தது! அந்தக் கம்பெனிக்கு 'ஸோல்புரோப்ரைட்டர்' 'ஏஜண்டு'—மானேஜர்'—'கிளார்க்' 'பியூன்' எல்லாம் அந்த நபர்தான்!! தன்னை தேர்ந்தெடுத்த இந்தியாவின் 'மூளை'யைப்பற்றி தெளிவாகத் தெரிந்துகொண்ட அவன் "வீடு வாங்கவேண்டுமென்றால் அட்வான்ஸ் தொகை வேண்டாமோ?" என்று கேட்டிருக்கிறான். தயங்குமோ, இந்த பாரத புண்யபூமியின் சர்க்கார்! அதுவும் பொன் விளையும் பூமியாச்சே! உடனே 'செக்கை' எடுத்து ரூ. 2,27,000க்கு கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறது. வாங்கிக்கொண்டு போனவன்தான்! பிறகேன், திரும்புகிறான்?

பைத்தியக்காரனா அவன்? 'பட்டைநாமம்' பரிசு கிடைத்திருக்கிறது, பண்டிதர் சர்க்காருக்கு! ஆளைத் தேடினால்—அகப்படுவானா? இடம் தெரிந்தாலல்லவோ தேடிக் கேட்க! 'விழித்திருக்கின்றனர்—அந்த வேதனையைக் கிளறியிருக்கிறார், பண்டிதர் குன்ஸ்ரு. பதில் தரவந்த அம்மையார், 'அந்த சம்பவம் உண்மைதான்' என்று ஊர்ஜிதம் செய்தாராம்!

*

இப்போதுதான் விளங்குகிறது, நமக்கு, எனிப்படி பெண்களை, தன்னுடைய இலாகாவில் பண்டிதர் நியமனம் செய்கிறார் என்பதன் இரகசியம் இதுபோன்ற 'ஊர்ஜிதம் செய்யவேண்டிய' விஷயங்களிருந்தால், பேசாது ஒதுங்கிக் கொண்டு, பொறுப்பை அவர்கள் வசம் விட்டுவிட்டால், பார்லிமெண்டு உறுப்பினர்கள் கேள்விமேல் கேள்வி போட்டு கிளற மாட்டார்கள், அல்லவா? பதில் தருவது அம்மையார்! தரப்படும் பதிலோ, வேதனை நிரம்பியது! முகலாவண்யம், பூராகாரமாக மாறி, அம்மையார் திரைப்பரைக் காண பெண்பாலிரக்கம் காட்டும் பண்பினர், பேசாமலிருப்பர்—பல கேள்விகளைக் கேளாமலும் விடநேரும். நேருவின் இந்த எண்ணம் அம்மையார் செய்திடை, ஊர்ஜிதம் செய்த அன்று பலித்திருக்கிறது! இல்லையென்றால், எத்தனைத் தூண்டுக் கேள்விகள், தோட்டாக்கள் போலப் பாய்ந்திருக்கும்!!

*

சேச்செ! ஒவ்வோர்முறை பார்லிமெண்டு கூடும்போது, இதுபோல, ஏதாவதொரு 'ஏமாந்த' செய்தியைக் கேட்கவேண்டியிருக்கிறது, நாம். இந்த லட்சணத்தில், ஐந்தாண்டுத் திட்டம் வேறும்! அதனை நிறைவேற்ற வெளி நாடுகளிலிருந்து நிர்பந்னர்களாம்! வெட்கமாயிருக்கிறது. வெளியில் சொல்ல—பண்டித நேருவோ, படாடோபமாகப் பவனி வருகிறார்—பாராளும் நிர்வாகி என்னைத் தவிர யாருண்டு?—என்று சொல்லிக் கொள்ளுகிறார். நம்மை 'பைத்தியக்காரர்'கள் என்றும் சொல்லுகிறார்! விந்தைதானே!!

★

என்று காண்போம் அவர்களை?

விபரீத காரணங்களைக் காட்டி ஏடுகள் எழுதவும், வாய்ப்புள்ளோர் வேதனை அடைப்பூட்டவும், அதன் விளைவாக சிறைச்சாலையில் வாடவுமான கதிக்கு ஆளான நாத்திக் குடித் தோழர்களையெண்ணும்போது துயரம் அடையாத அரசியல் வாழ்வினர், இருக்கமுடியாது.

மாதங்கள் பல ஆகிவிட்டன, அந்த மாணிக்கங்களைப் பார்த்து! கொண்ட கொள்கைக்க, வாழ்க்கையை' அர்ப்பணிக்கும் ஆற்றலும் திறமையும் கொண்ட அந்த அருமைத் தோழர்களைச் சந்திக்கவும், உரையாடவும் முடியவில்லையே என்றெண்ணும்போது, துக்கம் பிறிடுகிறது!

வஞ்சக இருள் மூடிய சமுதாயத்தை புதுவாழ்வுப் பாதைக்கு இட்டுச் செல்லும் இதயங்களன்றோ அவர்களுடையது. எத்தனை நாட்களுக்குத்தான், சிறைக் கம்பிகளுக்குள்ளே அந்தச் சிங்கங்கள் இருக்க வேண்டுமோ?—காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது! 'சுதந்திர தேவி' நாம் வடிக்கும் கண்ணீரிலே மிதந்துகொண்டிருக்கிறாள்!!

பாம்பும் தேளும், இருந்த இடத்தைவிட்டு, நாட்டிலே புகுந்து கொட்டமடிக்கின்றன.

நறுமணம் வீசும் அறிவு மலர்கள் இருட்டறைக்குள்ளே பூட்டப்பட்டு கிடக்கின்றன. என்று காண்போம் அவர்களை? எப்போது கேட்போம் அவர்தம் குரலை?

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 2—5—54 [ஞாயிறு

மே தினத்தில்!

★

மே தின விழா! — உலகெங்குமுள்ள பாட்டாளி மக்கள் இன்றைய நாளை உற்சாகத்தோடு கொண்டாடுவர்.

உலர்ந்து சருகாகிப் போன அவர்களது உள்ளத்தை எரிமலையாக்கி, 'தாங்களும் மனிதர்கள் தான் என்ற உணர்வை உண்டாக்கி உரிமை முழக்கம் செய்யத் தூண்டிய தினமாகும், இது.

இன்று ஆங்காங்குமுள்ள பாட்டாளி மக்கள், தமது எதிர்கால ஆசைக் கனவுகளைப்பற்றியும், எப்படி வெற்றி அடைவது என்பது பற்றியும் கூடிப் பேசுவர் — தமது சக்தியை ஒன்று திரட்டிக் காட்ட முனைவர்.

அந்தப் பாட்டாளிப் பட்டாளத்துக்கு, நாம் நம்முடைய வீர வணக்கங்களைச் செலுத்திக்கொள்ளுகிறோம்

நன்செயும், புஞ்செயும் : காடும் தோட்டமும், மாளிகையும் மனோகரமான வாழ்வும், ஏற்படச்செய்து நாடுகளைச் சோலைகளாக்கும் அரிய தோழர் பணியிலீடுபட்டுவரும் கோடிக்கணக்கான ஏழை மக்கள், இன்று தூங்கும் புலிகளல்ல— சாய்ந்த மரங்களல்ல — அவர்கள் கண்களிலே ஒரு புது ஒளியும், மூச்சிலே முழக்கமும், பேச்சிலே வீரமும் காண்கிறோம். வளர்ந்து வரும் இந்தப் பட்டாளம் வாகை சூடிடும் நன்னாளை ஆவலோடு எதிர் பார்க்கிறோம்.

ஏழ்மை மிகுந்த பூமி கண்பார்கள் இதனை — ஏனெனில் இங்கு இருப்போர் எல்லோரும் பாட்டாளிகள்தான்! கழனிகளை நம்பி கால் வயிறு கழுவப் பாடுபடுபவனும், ஆலைச் சக்கரத்தினருகில் வேலை செய்பவனும், கிராமத்துத் தச்சனும், உடை வெளுப்போனும், மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்குப் பணிபுரியும் படைவரிசை மிகப் பெரியது — அந்தப் படை வரிசையின் இருப்பிடம்தான், இந்தத் திராவிடம். ஏழ்மையும் இல்லாமையும் நிரம்பிய உழைப்போரின் பூமி இது.

இன்று, வடநாட்டு சுரண்டிகளின் கையிலும், முதலைகளின் ஆதிக்கத்திலும் சிக்கி அல்லற்படுகிறது. அதனால் இதன் மடியில் தவழும் மக்கள், இன்பத்தை அடையமுடியவில்லை! துன்பத்தின் பிம்பங்களாய் விளங்குகிறார்கள்!!

திராவிடத்தின் எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், உழைப்பை மூலதனமாக வைத்து, வாழ்க்கையை நகர்த்தப் போராடும் மக்கள் கூட்டமே காட்சி தரும்! அந்தக் கூட்டமெல்லாம் சுதந்திரக் கிளிகளாய், இன்ப வானம்பாடிகளாய் பறந்து திரியும் அந்நாள் வர வேண்டும்!

அந்த மகத்தான காரியத்தைச் சாதிக்கும் மனோவேகமும், இலட்சியப் பற்றும் இந்நாட்டு மக்களிடம் வளரட்டும்! வாகை சூடட்டும்!!— என்று, இந்த மேதின நாளில், சபதம் ஏற்போம்.

★

அவர்கள் செயல்!

அன்னை, அறிக்கை விடுத்திருக்கிறார்—அடி! உதை! காயம்! என்று அக்கிரமங்களைத் தாங்கிக்கொண்டிருக்கும் வீரர்களைப்பற்றி அல்ல —தன்னைப்பற்றி மக்களுக்கு.

அரவிந்தாஸ்ரமத்து அன்னைக்கு மக்கள் எங்கே தங்கள்மீது சந்தேகப் படுவரோ எனும் ஐயம் எழும்பியதால், தெளிவு விளக்கம்செய்ய ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறார்.

'பிரெஞ்சிந்திய அரசுடன் ஆஸ்ரமம் ஒத்துழைப்பதாக' தவறான கருத்து உலவுகிறதாம்!—அதனை தெளிவுபடுத்த அன்னையின் விளக்கம் கிளம்பியிருக்கிறது.

விளக்கமா! குழப்பமா!—என்று புரியவில்லை, நமக்கு.

மனித உலகில் நடக்கும் அக்கிரமங்களையும், மனிதனுக்குள்ள ஆசாபாசத்தையும், அரசியல் வாழ்வினுள்ள மோசடிகளையும் எடுத்துரைத்து, இதோபதேசம் செய்ய எண்ணுகிறது—ஆஸ்ரமம்.

புதுவையிலும் காரையிலும் நடைபெறுவது, இகலோகச்செயல் எனும் எண்ணம்போலும்! இவ்வளவு அக்கிரமங்கள் மலிந்துபோன இந்த இகலோகத்திலிருந்து அன்னையும் ஆசிரமச் சேடிகளும் ஏன் அல்லற்படவேண்டும்! ஆத்மாநந்தனை அடைய அழகான பங்களாக்களும் பளிங்கு மண்டபமும், பாலும் பழமும், ஏன்? சாயுச்ய பதவியைநாடும் இந்த ஆஸ்ரமத்துக் கூட்டம், 'அம்மையப்பனை' எண்ணி, கானகம் நோக்கியோ, மலையுச்சிக்கோ, பயணம் கிளம்பாது, மந்தமாருதத் தென்றலையும் அழகான கடற்கரையையும், அனுதினமும் ஏன் ரசிக்க வேண்டும்?

புதுவைப் போராட்டத்துக்கு சிறு உதவியும் செய்யாததுமின்றி—தமது; போலி வாழ்வுக்கு ஒரு புது விளக்கமும் தர முன் வருகிறது! ஆஸ்ரமத்தை அமைத்த அரவிந்தர், ஆங்கிலேயனை வெளியேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக, புதுச்சேரிக்குள் அடைக்கலம் புகுந்தார். அவர் பூண்ட போலி வேடம், அவரையே கோழையாக்கிற்று! இன்று அவரது சீடகோடிகளும், அதே நிலையில், 'பரமனை' அழைக்கின்றனர்—தமது சூதாட்டத்தை மறைக்க. என்ன, மதம் இது! என்ன துணிவு இவர்களுக்கு!!

"உண்மையைச் சொன்னார்!"

அந்தக் கேள்வியைக் கேட்க ஏனையோர் அச்சப்படும் இந்த நேரத்திலே, அவர் கேட்டிருக்கிறார்.

"யார் நீங்கள்?"—கோபமும் வீரமும் கொப்பளிக்கிறது, வார்த்தையில்.

"எங்களுடைய தலைவிதியை எழுத நீங்கள் யார்?" — உரிமை உணர்ச்சியும், சுயமரியாதைக் கனலும் தெறிக்கிறது, குரலில்.

"எங்களுடைய தலைவிதியை எழுத நீங்கள் யார்? இந்தப்போக்கை எத்தனை நாளைக்கு சகிக்கமுடியும் நாங்கள். உங்களிஷ்டம்போல் கூடுகிறீர்கள் — முடிவு செய்துவிட்டு கட்டளையிடுகிறீர்கள். இதனை ஏற்று அதனை நாங்கள் சரிவரச்செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். இது என்ன நியாயம்?" டில்லி ஆதிக்கத்தின், தான்தோன்றித்தனத்தைக் கண்டிக்கும் நம்முடைய குமுறல் அல்ல! அமெரிக்க நாட்டில் பர்மாவின் தூதராக இருக்கும் ஜான்பாரிங்டன் என்பார் கடந்த 24ந் தேதி கலிபோர்னியாவில் ஓரிடத்தில் எழுப்பிய கர்ஜனை இது.

உலக விவகார கவுன்சிலின் கூட்டத்தில் பேசுகையில், பாரிங்டன் முழக்கமிட்டாராம்,

"கம்யூனிசம்! கம்யூனிசம்!! — என்று கூச்சல் போடுகிறீர்கள். ஆசிய நாடுகளாகிய எங்களைப் பொறுத்த மட்டில், எங்கள் முன்னுள்ள பிரச்னை, கம்யூனிசமல்ல; காலனியலிசம்!" என்பதாக.

அன்பரின் விளக்கம், அரியதொரு சமயத்திலே, வெளியாகியுள்ளது! ஜினீவாவிலே கூடி, விவாதிக்கின்றன — வல்லரசுகள். கொழும்புவிலே குழுமி, ஆலோசனை புரிகின்றனர் ஆசியப் பிரதமர்கள். இந்தச் சமயத்திலே ஆசியாவின் குரலை, பாரிங்டன் எடுத்துக்காட்டியிருக்கிறார்—பாரை வளைத்திட பல்வகைத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கும், ஐசுவரியபூமியில்.

காலனியலிசம்! — சின்னதோர் சொல், கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்திலே தேங்கியிருக்கும் கொந்தளிப்பை, வெளிக்காட்டுகிறது.

ஐரோப்பியர்களின் சந்தையாக ஆசியா, இருந்த காலம் ஒன்றுண்டு. காலதூதனின் சம்மட்டி அடிபட்டு, அந்தக்காலம், பொடிப்பொடியாகி வருகிறது! இந்திய மண்ணிலும், பர்மாவிலும், இந்தோனேஷியாவிலும் ஐரோப்பிய வல்லரசுகள், அடிபட்டு வெளியேறிவிட்டன நடக்கவொண்ணாத அற்புதம்! — என்று நானிலமே கருதிக்கொண்டிருந்த காரியம், கடந்த உலகப்போரின் விளைவாக, வெகு சீக்கிரம் உருவாயிற்று.

விடுதலை பெற்று புதுவாழ்வு காணும் நாடுகளைச் சிறிதும், மதிப்பதில்லை, மேற்கத்தியர்— என்று குறைபடுகிறார், பாரிங்டன்.

கபடு சூதற்றவனைச் சிறையிலடைத்துப்பூட்டி, அவன் விடுதலையடைந்து எல்லோரையும்போல உலவ எண்ணும்போது, அவனை எள்ளிநகையாடுவதுபோல், விடுதலை பெற்ற நாடுகளை மேற்கத்திய வல்லரசுகள் நடத்துகின்றனவாம் — குறைபடும் பாரிங்டன், கோபாவேசமாகவேக் கேட்கிறார், "எங்களை இரண்டாந்தர மக்கள் என்று கருதி நடத்தும் இவர்கள் போக்கை எப்படிச் சகிப்பது?" என்று.

ஆசியாவின்ஜோதி ஜொலிப்பதாகவும், இந்தியாவால் இந்தப் பெரிய கண்டமே ஏற்றம் பெற்றுவிட்டதெனவும், எழுதவும் பேசவும் அழகாயிருக்கிறதே யொழிய, வெள்ளையர் நடத்தும் விதமிருக்கிறதே அதை எண்ணினால் அன்பர் பாரிங்டன் கூறுவது, விளங்கும்.

வளமும் செழிப்பும் நிறைந்த நாடுகள், பல! இன்னும் வெள்ளை மக்களின் பிடியிலே, சிக்கி, சித்திரவதைப் படுகின்றன. அராஜகமும், ஆபாசமும் அடிக்கடி பரிமளிக்கும் பிரான்சு, இன்னும் தனது ஆதிபத்ய பிடியை இழக்கவில்லை. இந்தோசீனம்!—அதோ, தளைகளை அறுத்துக்கொண்டிருக்கிறது. இந்தியத் திட்டுகள் இங்கே சங்கநாதம் செய்துகொண்டிருக்கின்றன.

காலனி ஆதிக்கத்தின் கொடுமைகளைக் குறித்த கருத்துக்களை அள்ளி வழங்கும் அறிஞர்களைப் பெற்ற மேல்நாடுகள், இன்று கண்ணைமூடிக்கொண்டு. கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று குதிக்கின்றன.

கையிலே கிடைத்த கனியை எளிதில் தராதாம் மந்தி. அந்தச் சுபாவம், ஆதிபத்ய பீடங்களை விட்டு, அணுவளவும் மாறவில்லை. தன்னுடைய ஆட்சியை ஸ்திரப்படுத்த முடியாது அல்லாடும், பிரான்ஸ், காலனித் தலைவன் என்னும் கித்தாப்பை இழக்க விரும்பவில்லை! மக்கள் மத்தியிலே வெடித்திருக்கும் எரிமலையை அணைக்க, விசிறியை எடுத்துக்கொண்டு வேகமாகப் பாய்கிறது!

இந்தோசீனம்—சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சின் பிடியிலே சிக்கிய நெற்களஞ்சியம். அங்குள்ள மக்கள், ஆண்டு ஏழாக தமது அயராத தலைவன் ஹோசிமின் தலைமையில், இரத்தத்தையும் பிணங்களையும் காணிக்கை தந்து ஒவ்வொரு அடியாகத் தமது தாயகத்தை மீட்டுக்கொண்டிருக்கின்றனர்! அந்த வெற்றியைக் காணும் பிரான்சுக்கு, விவேகம் ஏற்படவில்லை; சபலம் அதிகமாகிறது. அமெரிக்காவின் தாளடி பணிந்து 'அபயம்! அபயம்!!' எனக் கூறுகிறது. அமெரிக்காவோ வாயில்லா வீட்டுக்குள் நுழையும் வக்கிரபுத்திக்காரன்போல், 'சரி! நடத்து போரை! நானிருக்கிறேன் உதவி செய்ய' என்று தட்டிக் கொடுக்கி

றது. விளைவு, கடந்தவாரம், ராணுவ வீரர்கள் பலர், விமான மூலம் அனுப்பப்பட்டனராம், இந்தோசீனக் களத்துக்கு!

இன்று யாரை எதிர்க்க தன்னுடைய உதவிகளை அமெரிக்கா அள்ளி வழங்க முன்வருகிறதோ அதே ஹோ-சி-மின்னுடைய தயவை, கடந்த உலகப்போரின் போது, விரும்பியது அமெரிக்கா. இந்தோசீனத்தில் இன்றையதினம் விடுதலைப்போர் நடத்தும் படையினர், கடந்த உலகப்போரின் போது, நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகிகளல்ல! ஜப்பானியனின் படைகள் தங்கள் தாயகத்து மண்ணில் எடுத்தடிவைத்த போது, துப்பாக்கியேந்தி, போரிட்ட வீரர்கள். அந்த மாவீரர்களின் பணி கண்டு மெச்சிற்று, அமெரிக்கா! அன்பர் ஹோசிமின், பிரான்சை எதிர்த்து அமைத்த விடுதலை ராஜ்யத்தை—போட்டி சர்க்காரை — அமெரிக்கா ஆதரித்தது அன்று! வல்லரசுப் பட்டியலிலிருக்கும் அமெரிக்காவும் பிரிட்டனும் மனமுவந்து ஆசிகூறின விடுதலை இயக்கத்தை! ஆனால், இன்று, இயக்கத்தை அழிக்கவேண்டிய உதவிகளைச் செய்கிறேன்—என்று, முன்வருகிறது. விசித்திரம் தான்! — இந்த வேதனையைத்தான் அன்பர் பாரிங்டன், 'எங்களை இரண்டாந்தர மக்களாக நடத்தும் உங்கள் எண்ணத்தை எப்படிச் சகிப்பது?' என்று கேட்கிறார்.

அலட்சிய சுபாவமும், ஏதோஒர் அருவருப்பும் இல்லையென்றால், அமெரிக்கா இந்தமுடிவுக்கு வருமா. இதோ, ஒரு விளக்கம்கிடைத்திருக்கிறது — விடுதலை பெற்ற பூமியில் புதிய ஆலைகளை அமைக்கவும், போக்குவரத்து ஸ்தாபனங்களை உண்டாக்கவும், தமக்கு அனுமதியளிக்குமாறு அமெரிக்க பூபதிகள் ஹோசிமின் சர்க்காரைக் கேட்டனராம். தாயகத்தை விடுவிக்கும் மாபெரும் போரில் ஈடுபட்டிருக்கும் மாவீரர், இரத்தம் சிந்திப் பெற்ற தாயகத்துக்குள், இந்த இலாபவேட்டைக்காரர்கள் கொட்டமடிக்க சம்மதிக்கவில்லையாம்! இதுவே, அமெரிக்காவின், எரிச்சலுக்குக் காரணமாம். எவ்வளவு விந்தை! 'சிறையிலிருந்து விடுதலையாகிவிட்டாய் — மகிழ்கிறேன்!—உன் வீட்டை என் மார்க்கெட்டாக்கிவிட்டு, என்னிடம் வேலைக்காரனாக இரு' என்று சொல்வதைப்போல, செய்ய விரும்பிற்று அமெரிக்கா. ஒப்பவில்லை, ஹோசிமின். இப்போது, ஹோசிமின் வசம் சிக்காது, பிரெஞ்சுப்பிடியிலே கிடக்கும் இந்தோசீனப் பிரதேசங்களைக் காப்பதற்காகக்கோடிக் கணக்கில் பணத்தை அளித்திருக்கிறது! இந்த அக்கிரமத்தின் அளவை அறிந்ததாலேயே பாரிங்டன், உலக விவகாரக் கவுன்சிலில், சங்கநாதம் செய்திருக்கிறார், ''ஆதிக்க வேட்டை என்பதன்முழுப்பொருளையும் ஆசியா நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. இந்த அக்கிரமத்தை முழுமூச்சோடு, எதிர்ப்பதென கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. இந்தப் பூலோகத்திலிருந்தே அதனை அழித்தொழிக்க விரும்புகிறோம்.'' என்பதாக.

இரண்டு நூற்றாண்டுகளாக அந்நியன் சுரண்டலுக்கு ஆட்பட்டு அல்லல்படுகிறது, ஆசியா. இங்கே கிடைக்கும் கச்சா பொருள்களுக்காக ஆசியாவின் நிலப் பரப்பைத் தன்னுடைய அடிமைக் காடாக ஆக்கிவைத்திருக்கிறது. மணிமுடிகள் பல சாய்ந்தன! பிரெஞ்சுப் புரட்சியிலே, புதுவிதக் குடியரசு அரும்பிற்று! இங்கிலாந்திலே, அரசனின் கரத்துக்கும் வாய்க்கும் பூட்டு இடப்பட்டு, மணிமுடியின் தேஜஸ் குறைக்கப்பட்டது! போரின் விளைவாகப் பெரும்பெரும் தேசங்கள் சிதறி மாறி உருவாயின. இவ்வளவு மாற்றங்களை, காலம் சந்தித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், எங்கோயிருந்து ஓண்டவந்தோர், பிடித்த இடத்தைவிட்டு நகரப் பிடிவாதம் செய்கின்றனர். இந்தப் பேதமையை சகிக்குமோ ஆசியா? அதனாலேயே அன்பர் 'இந்த ஆதிக்க வேட்டையைப் பூலோகத்திலிருந்தே ஒழித்துக்கட்ட விரும்புகிறோம்' என்று வெளியிட்டிருக்கிறார்.

அவ்வண்ணம் கூறும்போது அமெரிக்கா தரப்பிலிருந்து என்ன பதில் வரும் என்பதையும் முன்னாடியே உணர்ந்து, அதற்கும் தக்க பதிலளித்துள்ளார் அமெரிக்கா எதையெடுத்தாலும் அளித்துவரும் பதில் என்ன? 'கம்யூனிசத்தை ஒழிப்பது! என்பதுதானே. அதற்குத்தான் பதிலிறுத்திருக்கிறார், ''கம்யூனிசம்! கம்யூனிசம்! என்று கூவுகிறார்கள் ஆசிய நாடுகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் முன்னுள்ள பிரச்னை, கம்யூனிசமல்ல; காலனியலிசம்'' என்பதாக.

இரத்னச் சுருக்கமான இந்தப் பதில் எங்கே புரியாமல் போய்விடுகிறதோ எனும் கருத்தில், பாரிங்டன் விளக்கமாகவே கூறியிருக்கிறார்.

''உலகத்தை எதிர்நோக்கியிருக்கும் பெரியதோர் ஆபத்து வறுமையேயொழிய — கம்யூனிசமல்ல. ஆசியாவில் வாழ்வோர், பசி, பட்டினி, இல்லாது வாழும்படிச்செய்வதுதான் எங்களுடைய பிரச்னை'' உலகத்தை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னை எதுவென்பதையும் ஆசிய மக்களின் இன்றைய விருப்பம் எதுவென்பதையும் நன்றாகக் குறிப்பிட்டிருப்பதோடு, மற்றொன்றும் கூறியிருக்கிறார். அது, மிகமிகக் கவனத்தில் வைக்கவேண்டிய விஷயமாகும். அந்த உண்மையை அறியாத காரணத்தினாலேயே, பலர் பலவாறாக எண்ணுகின்றனர். கம்யூனிசம்!—என்பது, தொடக்கூடாதவொன்று என்று எண்ணுகின்றனர். அந்தப் பிழையைச் சுட்டிக்காட்டுகிறார், பாரிங்டன்:-

''பசி, பட்டினி, வறுமை என்கிற ஆபத்து, மார்க்ஸின் தத்துவத்தால்மட்டும் உண்டாகவில்லை கார்ல் மார்க்ஸ் பிறக்காமலிருந்தாலும், இந்த ஆபத்துக்களுக்கு உலகம்

மகிழ்ச்சி

திராவிட நாடு அலுவலகத் தோழர் R. K மூர்த்தியின் துணைவியார் தோழியர் சரசுவதி 29-4-54 வியாழனன்று பெண் குழந்தைக்குத் தாயானார் என்ற செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

பதில்சொல்லத்தான் வேண்டியிருக்கும்''

கவனிக்கக் கோருகிறோம்.

''கம்யூனிசம்! — என்றால் அது ரஷ்யாவுக்குமட்டுமே, சொந்தமான வஸ்து''

''அது ஒரு, 'பேடண்ட் சரக்கு! அதனைப் பேசுவோர் ரஷ்யாவின் அனுமதி பெற்று, அதன் 'பிராஞ்சு கம்பெனி' போலத்தான் இருக்க வேண்டும்''

''மாஸ்கோவில் இடி இடித்தால் மன்னார்குடியிலும் இடித்ததென்று கூறவேண்டும்''

''எந்தக் காரியம் செய்யவேண்டுமென்றாலும், அதுபோல அங்கே செய்யப்பட்டதா என்று கமிட்டி கூடி ஆலோசிக்கவேண்டும்''

என்று, தாங்களே மார்க்சின் தூதர்கள் எனும் எண்ணத்தில் மார்க்சீசத்துக்கு மாசு உண்டாக்கும் தோழர்கள் பாரிங்டன் கூற்றைக் கவனிக்கவேண்டும்

பசி! பட்டினி! வறுமை!—ஆகியவைகளை வேறு பெயர் கொண்ட கட்சிகள், ஒழிக்கப் போராட வந்தால் அந்தக் கட்சிகள்மேல் 'பாங்காளிப் பாய்ச்சல்' காட்டுவது கூடாது.

மார்க்ஸ் கூறினார்!—மகிழ்கிறோம் போற்றுகிறோம்.

மார்க்ஸ் கூறாமலிருந்தால்......?—அப்போதும் யாராவது இந்தப் பிரச்னைகள்பற்றி போராடக் கிளம்பித்தானிருப்பார்கள்.

இந்த அடிப்படையை மறந்துவிட்டு, ஆட்டம் போடுகின்றனர், ஆதிக்கக்காரர்கள்! தங்களுடைய சுகபோகச் சுரண்டலும், ஆதிபத்யப் பிடியும், தளரும் என்ற கட்டம் வந்ததும், சிறு குழந்தைகளுக்குப் பூச்சாண்டி காட்டுவதுபோல 'கம்யூனிஸ்டு! கம்யூனிஸ்டு!' என்று கதற ஆரம்பிக்கின்றனர்.

இந்தக் காட்டுக் கூச்சலைக் கிளப்பும் அமெரிக்கருக்கும் அவர்தம் ஆதிபத்ய கூடாரத்துக்கும் சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறார், பர்மியத் தூதர். பாராட்டுகிறோம்—மகிழ்கிறோம்.

காலனி ஆதிக்கத்தின் கேடுகளைப் பற்றிமட்டுமே அவர் விளக்கியிருக்கிறார். இது, பொது விஷயம். ஆனால், அந்தந்த நாடுகளுக்குள்ளும் சில சொந்த விஷயங்களிருக்கின்றன. இவைகளைப்பற்றிப் பேச பாரிங்டன் எண்ணவில்லை—தேவையில்லை என்பதால்.

ஆனால், நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம், ஆதிக்க வேட்டை சுபாவம், அந்நியர்களிடை மட்டுமல்ல ஆசியாவுக்குள்ளே இருக்கும் பெரிய தேசங்களையும் ஆட்டி வைக்கிறது.

அன்பர் நேரு — பெரிய மனிதர் ஆகிய உலகைப்பற்றிப் பேசும் போது

ஆனால் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசும்போது, மிக மிகச் சாதாரணமான ஆதிக்க வேட்டைக்காரர்.

இதனை, யாரும்மறுக்கமுடியாது.

இந்த ஆதிக்க ஞாபகம் வந்தால், அவரும்தான் அலறுகிறார், ''கம்யூனிசம்! வகுப்புவாதம்!! என்றெல்லாம்.

எனவே, உரிமை முழக்கத்தைக் கேட்கும்போதெல்லாம், ஆதிக்கம் செலுத்துவோர் அச்சமடைந்து, எதை எதையோ, உரைக்கின்றனர்.

இந்தக் கெடுமதி, பூலோகத்திலிருந்தே மறையவேண்டுமென்றார்—பர்மியத்தூதர்.

அந்தப் புனிதக் காரியத்தில் தான், நாமும், ஈடுபட்டிருக்கிறோம்! பிறருடைய பிரதேசத்தை 'மார்க்கெட்' பூமியாக்கிச் சுரண்டலிரும்பும், சூது, இனி இல்லாது. அதன், அறிகுறி அரும்புகிறது. ❀

கனவு

கனவுகண்டேன் கனவுகண்டேன்
களிக்கடல் மிதந்திடும் புதுக்குவலயங்கண்டேன் (கன)

அநுபல்லவி

மன இருள்விழுங்கிடும் தினகரன் கண்டேன்
மதி ஒளிபரப்பிடும் புதுமுறை கண்டேன் (கன)

சரணங்கள்

ஆண்டை அடிமையெனும் அவச்சொலங்கில்லை
ஆண் பெண் பேதம் பாராட்டும் அழிகிறுக்கில்லை
வேண்டும் சுயேச்சைப்பேச்சில் விதிவிலக்கில்லை
மீறுஞ் சட்டதிட்டங்கள் கூறுவோரில்லை (கன)

மனித சமாஜத்தார் வாழ்வினைக்கண்டேன்
மன்னும் அபேதவாத நன்னிலை கண்டேன்
புனித வாலிபக்காட்சி இனிதுறக்கண்டேன்
பொங்கும் போகபோக்யம் எங்கணுங்கண்டேன் (கன)

கடவுளைக் காத்திடும் கசடாங்கில்லை
கவைக்குதவாத மதக்கற்பனையில்லை
அடஞ்செயும் புரோகிதத்தடியரங்கில்லை
அநியாயப் பணக்காரச் சனியன்களில்லை (கன)

கவலையில்லா வாழ்க்கைச் சுவைமிகக்கண்டேன்
கருத்தில் துணிவில்யாவும் உருப்படக்கண்டேன்
நவநவமாக இன்பம் தவழ்வதைக் கண்டேன்
நாகரீக உச்சியில் நடனங்கள் கண்டேன் (கன)

''ப ஜீவா''

அந்த இருவர்

சுமார் முப்பது ஆண்டுகளாகி விட்டன, அவன், இறந்து! இன்னும் அவனுடைய உடலைக்கண்டு, மரியாதை தெரிவிக்கிறார்கள், மக்கள்!!

சுமார் நாற்பது ஆண்டுகளாகிவிட்டன, இவனைக்கண்டு! எப்படி இறந்தான்—எங்கே—எதுவும், தெளிவாகத் தெரியாது மக்களுக்கு!

அவன் செத்தபோது, அந்த பூமியே, அழுதது! இவன் செத்தபோது, எடுத்தெறிந்தவர்கூட யாரென்று தெரியாது!!

காடுமேடு—சதுப்பு நிலம்—வயிற்றுப்பசி—தண்டனை—இப்படி அலைந்து திரிந்தவன், அவன். இவனோ, பஞ்சணை—பழரசம்—பாவையர்—பல மாளிகைகள்—பரவச வாழ்வில் திளைத்துக்கிடந்தவன்.

ஜெர்மனி, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், போலந்து, ஸ்விட்ஸர்லாந்து, இங்கிலாந்து—இவ்விதம் பல நாடுகளிலும், அலைந்து திரிந்தான், அவன் — இருக்க இடம் தேடி!

இவனுடைய பெயரைக் கேட்டாலோ, வரவேற்று, வாழ்த்துரை வழங்க அந்தந்த நாடுகள் யாவும் காத்துக்கிடந்தன—காணக் கிடைப்பதே பெரும் பாக்கியம் எனக் கருதின.

அவன் ஏழைகளின் பொந்துகளில், கண்ணீர் விட்டபடி அலைந்தான்!

இவன், மாளிகைகளில், மன உல்லாசத்தை அனுபவிக்க நேரமில்லையே என்று, அலைந்தான்.

அவன் செத்தான்! — மக்கள் அழுதனர்.

இவன் இறந்தான்! — யாருக்கும் தெரியாமல்.

அவன் மறைவு — மனதைக் குலுக்கியது.

இவனது சாவை, யாரும்பொருட்படுத்தவில்லை.

அவனைச் சாகாமல் காப்பாற்ற முயன்ற டாக்டர்கள், பலர்.

இவனை, எப்படிச் சாகடிப்பது என்று பாடுபட்ட, வீரர்கள்பலர்.

*

அவன், மாவீரன் லெனின்! இவன் மாபாதகன், ஜார்!!—இந்த இருவருடைய கடைசி நேரத்தையும் எண்ணிப் பார்க்கும்போது, பல உண்மைகள் விளங்கும் அவை மதோன்மத்தர்களுக்குப் பாடத்தையும், மக்கள் தூதர்களுக்கு மகிழ்ச்சியையும் தரும்

லெனின், ஏழை மகன். தன்னுடைய அண்ணனை ராஜத் துரோகக் குற்றத்துக்காக அரசாங்கம் பலியிட்டபோது, பதறித் துடித்து, அந்த அரசாங்கத்தையே அழித்துவிடவேண்டுமெனும் ஆவேசப் பொறியானான். அது முதற்கொண்டு, ஏழைகளோடு ஏழையாய் பசிக்கும் பட்டினிக்கும் ஆட்பட்டு, படாத பாடுபட்டுத் திரிந்தான்! கஷ்டத்தைத் துடைத்து வெற்றி கண்டான்!!

ஜார்-மன்னன், தன்னுடைய நாட்டு மக்கள் சிந்தும் கண்ணீர்க் கடலிலே, அதிகாரக் கப்பலை மிதக்கவிட்டு, வெறியாட்டம் ஆடினான். நியாயம் கோரியோரையெல்லாம், சுட்டுப் பொசுக்கினான். ஆனால், கடைசியில், எப்படி இறந்தான் என்பதே தெரியாது போனான்.

மக்கள் துயர்! வேதனை!!—இவைகளை அறிந்து பாடுபட்டான், லெனின்.

படாடோபம்! சுக வாழ்வு!! — இதை இழக்காமலிருக்க வெறியாட்டம் ஆடினான், ஜார்.

கடைசியில் அலைந்து திரிந்த லெனினை, மாளிகையில் வைத்துப் போற்ற, மக்கள் துடித்தனர். தங்களை ஆட்டிப்படைத்த ஜாரை, குடிசைக்குள் தள்ளி, குடியானவனைப்போல வாழச் செய்தனர்.

விருந்து ஏந்திய கரத்திலே, கூழ்! வேலைக்காரர்களை மிரட்டி வாழ்ந்த அவன் மனைவி, அடுப்பங்கரையில், உணவு தயாரித்தாள்! பாராட்டிச் சீராட்டி வளர்க்கப்பட்ட மகன், குடியானவச் சிறுவர்களுடன் விளையாடவேண்டியவனானான்!

பழி வாங்கிற்று, மக்கள் உள்ளம்! 'பாரடா! பாவி—இதுதான் நாங்கள் நடத்திய வாழ்க்கை' என்று ஜாருக்குப் போதிக்க விரும்பியது.

தங்களோடு கஷ்ட நஷ்டங்களை அனுபவித்த லெனினையோ, சுக வாழ்வில் வைத்துக் காண விரும்பியது.

போர் வீரர்களால் விரட்டி விரட்டி அடிக்கப்பட்ட லெனின், அதே வீரர்கள் வாழ்த்த பவனி வந்தான்! அப்போது வாய் திறந்தால் வரிசை வரிசையாய் நின்ற போர் வீரர்கள், துப்பாக்கியேந்தி, மிரட்டத் துடித்துக் கிடந்தான் ஜார்! அவர்களாலேயே சுடப்பட்டு மாண்டான்!!

இருவர், கதை இது. ஆனால் இது விளக்கும், பாடம் பெரியது. இதனை இன்று சுகவாசிகளாயிருப்போர், உணரவேண்டும். ஆதிக்க அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

அவர், கூறுகிறார்!

ஜனநாயகம் ஒரு புனிதமான கொள்கை!—என்று ஒவ்வொருவரும் கூறுகிறார்கள், அதனை அளக்கும் அளவுகோல், மனிதனையொழிய அவனுடைய செல்வாக்கோ, செல்வமோ, ஜாதியோ அல்ல என்றும் தெரிவிக்கின்றனர். ஆனால் அப்படிச் சொல்லும் ஒவ்வொருவரும் மனிதனை அல்ல மதிப்பிடுவது. அவனுடைய செல்வம், அந்தஸ்து, ஜாதி ஆகியவைகளை வைத்தே அளக்கின்றனர். இந்தப் பழைய வழக்கம் இன்னும் மாறவில்லை நானும் பார்க்கிறேன் — ஜாதிப் பாகுபாடு கூடாதென்று சங்கநாதம் செய்வோர், இன்னும் ஜாதியின்மீதும், பழைய ஏற்பாட்டுகளின்மீதுமுள்ள பற்றுதலை ஒழிக்கவில்லை! அவைகளை மனதில் வைத்தபடியே, ஜனநாயகம்பற்றிப் பேசுகின்றனர்"

பாட்னாவில்—டில்லி மந்திரி,
ஜகஜீவன்ராம்.

காந்தியாருடன் பேட்டி!

1933-ல்!

காசியில், ஆதித்திராவிட மக்கள், ஆண்டவனைத் தொட்டுப் பார்க்க வேண்டுமெனும் ஆவலுடன் புக முயன்றார்களாம்! 'அது கூடாது', எனமறுத்த புரோகிதர்கள், அரசாங்கத்து நீதி மன்றத்தை நாடி, தடை உத்திரவு பெற்றிருக்கிறார்கள், கடந்த வாரம்!!

மறைந்த காந்தியார், ஆதித்திராவிட மக்களை கோயிலுக்குள் அழைத்துச் செல்லவேண்டுமெனும் தன்னுடைய கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருக்கும்போது, 1933 டிசம்பரில் சென்னை மாநிலத்திலும் சுற்றுப்பிரயாணம் செய்தார். அதுபோது, சென்னையிலும் கன்டாகுமரியிலும் அவரைச்சந்தித்து, சுயமரியாதை இயக்கத்தோழர்கள், விவாதித்தார்கள். விவரத்தை அந்தக் கால 'புரட்சி' ஏட்டில், தோழர்கள் காணலாம்.

பழைய சங்கதி! எனினும் புதியவர்களுக்கும், புரையோடிய புண்ணை ஆற்றத் தயங்கும் 'அவர்களுக்கும்' பயன் படலாமெனக் கருதி, வெளியிடுகிறோம்:—

21—12—33 காலை 8-30 மணிக்குத் தோழர் எஸ். ராமனுதன் அவர்களும் மற்ற சுயமரியாதைத் தோழர்களும் தோழர் காந்தியார் அவர்களை தோழர் நாகேசுவரராவ் பந்தலு அவர்கள் வீட்டில் பேட்டி கண்டு பேசினார்கள். பேட்டிக்கு காந்தியவர்கள் 15-நிமிஷமே ஒதுக்கி வைத்திருந்தும் 35-நிமிஷம் வரையில் அவராகவே ருசியோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் ராமனுதன் அவர்களுடன் சென்றிருந்த தோழர்கள்:— கே. எம். பாலசுப்ரமண்யம், எஸ். குருசாமி, குஞ்சிதம், பொன்னம்பலனார், ப. ஜீவானந்தம், சாந்தம், சகுந்தலா, ரங்கனுதன், சம்பந்தம், முத்து, தங்கராஜ் முதலியவர்கள்.

சம்பாஷணை சமயத்தில் காந்தியாரோடு இருந்தவர்கள் தோழர் மீராபாயும், இரண்டு காரியதரிசிகளும் அவர்கள் சம்பாஷணையின் இடையில் சென்னை தோழர் கே. பாஷ்யமய்யங்கார், அவர்களும் மற்றும் மூன்று பெண்களும் வந்து கலந்துகொண்டார்கள்.

ஆரம்பத்தில் தோழர் காந்தியார் தோழர் ராமனுதன் அவர்களை நோக்கி "நீங்கள் பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று (Rationalist) நேற்றுத்தான் எனக்குத் தெரியவந்தது" என்று சிரித்துக்கொண்டே கூறினார். தோழர் ராமனுதன் அவர்கள் தன்னுடன் வந்தவர்களைக் காட்டி "இவர்கள் சுயமரியாதைக்காரர்கள்; தங்களைக் கண்டு பேச வந்திருக்கிறார்கள்" என்று கூறி அறிமுகப்படுத்தினார்.

காந்தியார்:- (தலையை அசைத்துக்கொண்டே) "சந்தோஷம்' என்று கூறி, "ஆகவே நீங்களெல்லோரும் அறிவுவாதிகளா?" என்று கேட்டார். அதற்கு தோழர் ராமனுதன் அவர்கள் "அறிவு வாதி, சுயமரியாதைக்காரன்" ஆகிய இரண்டு வார்த்தையும் ஒரே பொருளைக் குறிப்பதுதான் என்று கூறினார்.

காந்தி:- சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி நான் நன்கு அறிவேன்.

காந்தியார் தோழர் ராமனுதனை நோக்கி, "தாங்கள் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?"

ராம:- ("Rationalist") என்ற பத்திரிகையை நடத்திக்கொண்டிருக்கிறேன். தங்களுக்குக் கூட அதைத் தொடர்ச்சியாக அனுப்பிக்கொண்டு வருகிறேன்! தாங்கள் பார்த்திருக்கலாமே.

காந்:- [வியப்புடன்] இல்லையே! நான் பார்க்கவே இல்லை!

ராம:- தங்களுடைய (Wardha] வார்தா விலாசத்திற்குத்தானே அனுப்புகிறேன்?

காந்:- இல்லையே! ஒன்றுகூடக் கிடைக்கவில்லையே!

ராம!- ஒன்று விடாமல் அனுப்பி இருக்கிறேன்!

காந்:- காரியதரிசியைப் பார்த்து குஜராத்தியில் ஏதோ கேட்டார்.

ஒரு காரியதரிசி குஜராத்தியிலும் மற்றொருவர் ஆங்கிலத்திலும் "நேற்றுத்தான் ஒரு பிரதி கிடைத்தது" என்று கூறினார்கள்.

"நாங்கள் ஹரிஜனங்கள் என்ற பெயரை வெறுக்கிறோம். எங்களுக்கு இந்துமதமோ வேறு எந்த மதமோ தேவையில்லை......என்று அச்சிட்டு அதில் 1316 தாழ்த்தப்பட்ட மக்கள் கையெழுத்திட்டிருந்ததை தோழர் தங்கராஜ் அவர்கள் தோழர் காந்தியாரிடம் கொடுத்தார். காந்தியார் அவர்கள் அதை வாங்கி ஒவ்வொரு வரியையும் படிக்கும்போதே ஆமாம், ஆமாம் என்று உச்சரித்துக்கொண்டே அதைப் படித்து முடித்தார்.

கா:- உடனே, 'நீங்கள் கூறுவது சரிதான். நான் செய்யும் ஹரிஜனப் பிரசாரமானது ஹிந்து மதத்தில் இருக்கப் பிரியப்படுகிறவர்களுக்கேயொழிய மற்றவர்களுக்கு இல்லை. நீங்கள் செய்யும் வேலையும் நான் செய்யும் வேலையும் ஒன்றுதான்' என்றுகூறி மகஜரில் [Resent] "வெறுக்கிறோம்" என்னும் வார்த்தையைக் கண்டு சற்று மனம் புழுங்கினவர்போல் இந்த வார்த்தையை உபயோகப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை" யென்றும் அப் பெயர் [ஹரிஜனம்] விரும்பியவர்களுக்கே வழங்கப்பட்டதென்றும் வேண்டாதவர்களுக்குக் கட்டாயமாக அளிக்கப்படவில்லை யென்றும் கூறினார்.

கு:- கோவிலில் தாழ்த்தப்பட்டவர்களைத் தற்காலம் சூத்திரர்கள் என்பவர்கள் போகும் இடம்வரையில்தானே அனுமதிக்கவேண்டுமென்று ஓரிடத்தில் கூறியிருக்கிறீர்கள்?

கா:- இல்லை. இல்லை ஒருக்காலும் சொல்லவே இல்லை.

கு:- ஆம். தாங்கள் கூறியிருப்பதாகச் சென்னைப் பத்திரிகைகளில் எல்லாம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

கா:- அப்படி இருந்தால் காட்டுங்கள் பார்ப்போம்.

ராமநாதன்:- "அப்படியானால் நாங்கள் கூறுவது தவறா?

கா:- ஆம் தவறுதான் ஆனால்' பத்திரிக்கைகள் நான் கூறுவதை சந்தர்ப்பத்தைவிட்டு பிரித்துப் பிரசுரிப்பதால் இத்தகைய குற்றம் நேரிடுகிறது. ஜாதி இந்துக்கள் எவ்வளவு தூரம் செல்லுகிறார்களோ அதுவரை ஹரிஜனங்களை அனுமதிக்கலாம் என்பதுதான் என் அபிப்பிராயம்'

கு:- தங்களை ஹரிஜனப் பிரசாரத்திற்காக வரவழைத்துத் தங்களைச் சூழ்ந்திருக்கும் அத்தனை பார்ப்பனர்களும் ஆஷாடபூதிகள் என்பதையும், புரட்டர்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்களா?

கா:- எல்லோரும் அப்படி இல்லை.

கு:- ஆமாம். 100-க்கு 99¾ பார்ப்பனர்கள் அப்படித்தான். எங்களுடன் தயவுசெய்து திருவல்லிக்கேணித் தெருக்களும் மைலாப்பூர் தெருக்களுக்கும் வருவீர்களானால் அத்தனை பார்ப்பனர்கள் வீட்டிலும் "பார்ப்பனர்களுக்குமட்டிலும்வாடகைக்கு விடப்படும்" To let for Brahmins only என்னும் போர்டு தொங்கவிட்டிருப்பதைக்காணலாம். இதே ஆசாமிகள்தான் இன்று தங்களோடு ஹரிஜனப் பிரசாரம் செய்கிறார்கள். இது எவ்வளவு அயோக்கியத்தனம் என்று பாருங்கள்.

கா:- (சிரித்துக்கொண்டே) பதட்டம் வேண்டாம். நானும் பார்ப்பனக் கொடுமைக்கு ஆளாகியதுண்டு. இன்னும் ஆளாகிவருகிறேன். அறிவும், கல்வியும் இருக்கும் ஒரு கூட்டம் மற்ற கூட்டங்களின் மேல் ஆதிக்கம்செலுத்தல்இயல்பே. உதாரணமாக கணவனையும், மனைவியையும் எடுத்துக்கொண்டால் கணவன் மனைவியின்மேல் ஆதிக்கம் செலுத்துவது இயல்பு. என் மனைவி எனக்கு அடிமையாக இருந்தாள். இன்னும் இருக்கிறாள். இதிலிருந்து கணவனுக்கும் மனைவிக்கும் அன்பு இல்லையென்று சொல்லமுடியுமா?

கே. எம். பாலன்:- அத்தகைய கணவர்கள் (கூட்டம்) எமக்குத் தேவையில்லை.

கா:- அப்படிச் சொல்லமுடியாது —அறிவுள்ளவர்கள் ஆதிக்கம் செலுத்துவதென்பது மனித இயற்கை.

குரு:- இல்லை. அது மனித இயற்கையல்ல. பிராமணர்கள் நல்லவர்கள்தான். ஆனால் அவர்களுடைய மதமானது (ஹிந்துமதம்) அவர்களை அயோக்கியர்களாக ஆக்குகிறது.

கா:- ஆஷாடபூதித்தனமும், அயோக்கியத்தனமும் எங்கும் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் பிராமணர்களிலும் யோக்கியர்கள் இருக்கிறார்கள்.

கு:- ஹிந்துமதமானது பார்ப்பனர்களைத்தவிர வேறு யாருக்காவது எந்த விதத்திலாவது எவ்விதப் பலனையாவது அளித்திருக்கிறதா?

கா:- இல்லை, அப்படிச் சொல்லிவிட முடியாது.

குரு:- தாங்கள்தான்கோயில்களை 'விபசார விடுதிகள்' என்று கூறியிருக்கிறீர்களே! அப்புறம் ஏன் ஒடுக்கப்பட்டவர்களையும், அந்த விபசார விடுதிகளுக்குள் அழைத்துச் சென்று விபசாரிகள் ஆக்க முயலுகிறீர்கள்?

கா:- விபசார விடுதிகளாயிருக்கும் கோயில்களைப் பரிசுத்தப்படுத்தும் பொருட்டே அவர்களை உள்ளே அழைத்துச் செல்லவிரும்புகிறேன்.

கு:- அதெப்படி பரிசுத்தப்படுத்தமுடியும்?

கா:- (பதில் இல்லை)

குஞ்சிதம்:- ஜாதியை ஒழிக்காமல் தாங்கள் தீண்டாமையை எப்படி ஒழிக்கமுடியும்?

கா:- [சிரித்துக்கொண்டே] என்னோடு கூடவாருங்கள் காண்பிக்கிறேன்.

தீண்டாமையை ஒழிப்பது என்பதிலேயே ஜாதியை ஒழிப்பது என்பதும் அடங்கியிருக்கிறது. உதாரணமாக Newton's Law of Gravitations) நியூட்டனினுடைய ஆகர்ஷண சக்தியின் விதியை (Einstein's Law of Relativity) ஐன்ஸ்டினுடைய 'ரிலேட்டிவிட்டி' விதியானது நேரிடையாகக் குறிக்கவில்லையானாலும் அதை ஒத்துக்கொண்டு அதைவிடப்பெரியதோர் விதியையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. அதைப் போலவே தீண்டாமை ஒழிப்பு என்பது ஜாதியை நேரிடையாகத் தாக்கவில்லையென்றாலும் அது உண்மையிலேயே ஜாதியையும் ஒழித்து அதைவிட பெரிய தீண்டாமையையும் ஒழித்துவிடுகிறது.

ராமநாதன்:- நீங்கள் சொல்லும் உதாரணம் அவ்வளவு பொருத்தமாயில்லை.

இச்சமயம் அதிகக் காலதாமதம் ஆகிவிட்டபடியாலும், காந்தியாரைக் காண மற்றும் அனேகர் காத்துக்கொண்டிருந்தபடியாலும் சம்பாஷணை முடிவுபெறாமல் முடிவுற்றது.

★

தொடர் கதை!

புதிய கருத்துகள் பூத்துக் குலுங்கும்

"அமைந்த பாதை"

ப. வாணன்

தீட்டியது

விரைவில் வருகிறது

ஏழையின் கதை

[தாமரை]

ஏழை ஏன் தாழ்ந்தான்? யாராலே தாழ்த்தப்பட்டான்? அவனைத் தாழ்த்தியவர்கள் எப்படிப்பட்டவர்கள்? இவைகள் எல்லாம் ஏற்கனவே விளக்கப்பட்டுவிட்டன.

இன்றைக்கு ஏழையின் சார்பிலே தான் எல்லோருமே வாதாடுகிறார்கள், பணக்காரனுக்கு வக்காலத்து வாங்க எவருமே முன்வருவதில்லை. காரணம், உலகத்தில் ஏழைகள் தான் ஏராளம்; சீமான்கள் ஒரு சிலர்தாம்—அதுவும், பாதிக்குமேல் புத்தகாலச் சரக்குகள்! பணக்காரன் பணத்தை வளர்த்தானே தவிர மனதை வளர்க்க மறந்துபோனான்! ஆகையால், தவறியும் அவன்மேல் பரிவு காட்ட எவருக்கும் மனம் வருவதில்லை.

உலகச் சரித்திரத்திலே, ஒரு நூறு ஆண்டுகள் ஏழைக்காக திட்டங்கள் தயாரிக்கச் செலவிடப்பட்டன. இவைகளிலே முக்கியமாக இப்போது உலவுபவை கம்யூனிஸமும் சோஷியலிஸமுந்தான். செல்வத்தைக் குவிக்க உதவும் சாதனங்களையெல்லாம், பொதுவாக்குவது என்பதுதான் இவற்றின் அடிப்படை. ஒரு சிலரிடத்தில் பணங் குவியாமல், அத்தனை பேருக்குமாக அதைப் பயன்படுத்துவது. எதுவும் எவருக்கும் அடிமைப்பட்டிருக்கக்கூடாது, அனுபவ பாத்யதைதான் உண்டு, எதிலும் எவருக்கும். மனிதனுக்கு வாழும் உரிமை உண்டு. ஆனால், சிலர், பலரை வாழாவெட்டிகளாக்கிவிட்டு வாழுவது கூடாது. சுருக்கமாகச் சொன்னால், 'முதலாளித்துவமுறையினால் பொருளாதார சக்திகள் மனிதப் பண்புகளைக் கட்டுப்படுத்தி இயக்குகின்றன; அது கூடாது. ஆகவே, அதை மாற்றி மனிதப் பண்புகள் பொருளாதார சக்திகளை இயக்கும்படி ஆக்கவேண்டும்.' இதுதான், இந்தத் திட்டங்களின் குறிக்கோள்.

இவை திடீரென எவராலோ கண்டுபிடிக்கப்பட்ட திட்டங்களல்ல. காலப் போக்கில் அறிஞர்கள் சிந்தனையில் கருத்தரித்து உருவமைந்து உலகுக்குத் தரப்பட்டவை. எவரோ ஒருவருடைய 'பேடண்ட்' சரக்கல்ல எத்தனையோ பேர் சிந்தித்துச் சிந்தித்து வெளியிட்ட எண்ணங்களின் தொகுப்பு.

1824ம் ஆண்டு லண்டனில் ஏற்பட்ட கூட்டுறவு சங்கம் சோஷியலிச அடிப்படையில் அமைக்கப்பட்டது.

ராபர்ட் ஓவன், செயின்ட் சைமன், பெய்ன், கோட்வின், சார்லஸ்ஹால், ஆடம்ஸ்மித், ரிகார்டோ போன்ற அறிஞர்கள் தாம் இந்தத் திட்டம் உருவாகக் கருத்துக்களை அளித்தவர்கள்.

கடைசியில் வந்தவன் கார்ல் மார்க்ஸ். இவனுடைய கருத்துக்கள் என்ன என்பதை ஏழை உணர்ந்தாக வேண்டும். இன்றைய உலகில் இவனைப்பற்றிப் பலர்பேசுகிறார்கள். ஆனால் பேசுகிற பலருக்கு இவன் என்ன சொன்னான் என்பது மட்டுந் தெரியாது. உலக அறிஞர்களின் புத்தகங்களைப் படிக்காமலே புகழ்வது பெரும்பாலான மக்களுக்குப் பழக்கமான குணம். பிரெஞ்சுப் புரட்சியின் போது 'ரூசோ' எழுதிய சமுதாய ஒப்பந்தத்தைப் பற்றி எல்லோருமே பேசினார்கள். ஆனால் பேசியவர்கள் பலர் அந்தப்புத்தகத்தைப் பார்த்தது கூட இல்லை. அதே போலத்தான் இன்றைய உலகிலும் கார்ல் மார்க்ஸும் அவன் எழுதிய 'மூலதனம்' (Capital) என்ற நூலும்.

பலர் தெரிந்து கொள்ளும்படி கார்ல் மார்க்ஸினுடைய கருத்துக்கள் சுருக்கித் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது. அதைப் படித்துவிட்டு, ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.

"இன்றைய உலகில், உற்பத்தி செய்யும் சாதனங்களுக்கு உரிமையாளர்களாக இருக்கும் சிலரிடம், பெரும்பாலான உழைப்பாளிகள் உண்டாக்கித் தந்த செல்வம் முடங்கிக்கிடக்கிறது—நிலங்கள் உட்பட. அவர்கள் அதைத் தங்கள் உல்லாச வாழ்வுக்கே பயன்படுத்துகின்றனர். குவிக்கப்பட்டிருக்கும் அந்த செல்வத்தைப் பெற, மக்களால் நடத்தப்பட்ட, போராட்டங்களின் தொகுப்புதான் இன்றைய சரித்திரம். நாடுகள், அரசாங்கங்கள், சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்கள், மதங்கள் இவைகள் எல்லாம் சிறுபான்மையோரான செல்வர்கள், பெரும்பான்மையான ஏழைகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவே ஏற்படுத்தப்பட்டவை. வாணிபத்துக்கான வழிகளும், கண்டுபிடிக்கப்பட்ட கண்டங்களும், ஜன சமுதாயத்தின் துடிப்பான அங்கமான முதலாளிகளின் தனி உரிமைக்கே வழி வகுத்தன. இதனால் முதலாளி மற்றவர்களின் உரிமைகளை அழித்தான். மதச்சார்புள்ள, சார்பற்ற அமைப்புகளைத் தனக்கடிமைப்படுத்திக்கொண்டான். உழைப்பைக் குறைக்க வேண்டும் என்ற காரணத்தைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு மலிவான—ஏழைக்குடிலில் கிடைக்கக்கூடிய ஏர், கலப்பைகளுக்குப்பதிலாக அதிக விலையுள்ள இயந்திர சாதனங்களைப் புகுத்தினான். ஜேம்ஸ்வாட், நீராவி இயந்திரம் கண்டு பிடிப்பதற்கு முன்னால் நாகரிக மனிதனுக்குத் தேவையான சாதனங்களை எல்லாம் தொழில் நுட்பந் தெரிந்த பலர், அவர்களுக்குச் சொந்தமாயிருந்த கருவிகளால் செய்து முடித்தனர். கைத்தறி—நெசவாளியின் சொந்த உடமை. உழவன், நெசவாளி, கொல்லன் இவர் போன்றோர் எல்லாம் அவர்களுக்கு அவர்களே எஜமானர்களாக—உடமையாளர்களாக இருந்தார்கள்.

இயந்திரம் இவர்கள் வாழ்வில்புகுந்ததும் வாழ்வில் இன்னலும்புகுந்தது. குறைந்த விலையில் நிறைய உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களோடு போட்டி போட அவர்களால் இயலவில்லை. இயந்திரம் வாங்கப் போதுமான கை முதலும் அவர்களிடம் இல்லாமல்போனது. இயந்திரங்களை அமைத்தவர்கள், தொழிலாளர்களாக இல்லை. வாடகைக்கு ஆட்களைப் பிடித்து-வேலைவாங்கினார்கள். செல்

வம்நிறைந்திருந்த தொழிலாளர்கள், முதலாளி நிலைக்கு உயர்ந்தனர். செல்வங் குறைந்தவர்கள் அவர்களுக்கு அடிமைகளானார்கள்.

இயந்திரத்தை இயக்க வேண்டிய உழைப்பொன்றே, தொழிலாளி விற்கவேண்டிய சரக்காகமாறிற்று. இயந்திரங்கள் காலப் போக்கில் அடைந்த வளர்ச்சி அதை இயக்க வேண்டியவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது. அதனால் தொழிலாளர் பலர்வேலைகளை இழந்தார்கள். வாழ வழியில்லாமல் போனதால் மலிவான சரக்காக உழைப்பை மாற்றினான் தொழிலாளி. குறைந்த கூலி—நிறைந்தஉழைப்பு! உற்பத்தி செய்யப்படும் பொருள்களிலிருந்து கிடைக்கும் லாபத்தில் பெரும்பங்கு முதலாளியின் இரும்புப் பெட்டியில் போய் முடங்கியது இந்த மாறுதலால். ஆனால், உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு மதிப் பேற்படுவது தொழிலாளர்களால் தான். ஆகையால் அதன் உரிமையும் அவர்களுக்குத் தான் இருக்க வேண்டும். கூடுதல் மதிப்பான இலாபத்தைத் தொழிலாளியிடமிருந்து கொள்ளையடித்துக்கொண்டு போன முதலாளி, தான் மட்டும் உல்லாசங்களை அனுபவிக்கிறான்—உழைப்பாளிகளை ஏமாற்றிவிட்டு! அதிலே ஒருபகுதி முதலை வளர்த்துக் கொள்ள உதவுகிறது—அவனுடைய ஆதிக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ள!

பழைய விவசாயமுறை கட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி முறைக்குள் அடங்கிக்கிடந்தது. ஆனால், முதலாளித்வ முறை அடிக்கடி முறைகளை மாற்றிக் கொண்டே வருகிறது—இயந்திரங்கள், தொழில் முறைகள், இவற்றிலே வளர்ச்சி அடைவது மட்டுமல்ல; உலகத்தின் பல பாகங்களில் மார்க்கட் பிடிப்பதிலுந்தான். முதலாளித்வ முறை இதனால் தேசிய வரம்புகளைமீறி அகில உலகபொருளாதார அமைப்பிலும் ஆதிக்கஞ் செலுத்திவருகிறது. நகரங்களில் தொழிற்சாலைகளை அமைத்து, கிராமங்கள், நகரங்களை நம்பி வாழும்படிசெய்ததும் அதுதான். நாகரிகத்தில் வளர்ந்த நாடுகளை நம்பி, நாகரிகத்தில், குறைந்த நாடுகள் வாழும்படியான நிலைக்குக் கொண்டுவந்ததும் அதுதான். ஒரு நூற்றாண்டில் இதுவரையில் இல்லாத அளவுக்கு உற்பத்தியை ஏராளமாக்கி, ஜனப்பெருக்கத்தை உண்டாக்கியதும் அதுதான். ஆனால் இவைகளின் விளைவுகள் இவற்றின் காரணகர்த்தாக்களான முதலாளிமார்களாலேயே கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டன. விற்கமுடியாத அளவுக்கு மிஞ்சிப் போன பொருள்களும், வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வாங்குகிற சக்தியை (Purchasing Power) இழந்து, கூடுதல் உற்பத்திகளை அடைந்து வாழ முடியாத தொழிலாளிகளுந்தான் இன்றைய உலகத்தில் நெருக்கடியை உண்டாக்கியிருப்பவை. இதனால் உலகம் அலைக்கழிக்கப்படுகிறது.

இதன் விளைவாக முதலாளி வர்க்கம் பழைய விவசாயப்பரம்பரையை விரட்டி, ஓட்டிவிட்டது. அதனால் பழைய முறையையும்விட புதிய முயற்சியால் சாதாரண மக்கள் மிகவும் மோசமான அடிமைகளாக்கப் பட்டார்கள். ஆனால், பழைய பிரச்சினை மிகவும் சுருக்கமான முடிவுக்கு வந்துவிட்டது. உற்பத்தியையும் அதை உண்டாக்கும் சாதனங்களையும் தங்களுக்குள் கட்டுப்படுத்திக் கொண்டு உல்லாசத்தை அனுபவித்த முதலாளிகள் — வாழ்க்கைக்குப் போதுமான அளவுக்குக்கூட இல்லாமல் அவதிப்படும் பெரும்பான்மையான தொழிலாளிகள். மனிதனுக்கு மனிதன் உள்ள உறவு சுயநலமாகவும், ரூபாய் அணா பைசாவாகவும் உருமாறியது.

ஆகையால் முதலாளியின் முதன்மையான நோக்கம் இலாப வேட்டையாகத்தான் இருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை, உழைப்புக்கு ஊதியங் கொடுப்பதற்கும், கச்சாப் பொருள்களை வாங்குவதற்கும் ஆகும் செலவுகளைவிட அதிக விலைக்கு விற்கின்றான். முதலாளித்வத்தை ஆதரிக்கும் பொருளாதார நிபுணர்கள், "மார்க்கட்டில் உள்ள போட்டியால் இந்த லாபம் குறிப்பிட்ட அளவுக்குள் கட்டுப்பட்டே இருக்கும்" என வாதிக்கிறார்கள். ஆனால். போட்டியில சிக்கும் பலருடைய சிக்கலான நிலை பெரிய முதலாளிகளிடத்தில் தங்கள் தொழில்களை ஒப்படைக்கவே தூண்டும். உலக நிகழ்ச்சிகளை உற்று நோக்கும்போது மூலதனம்நிறைந்த முதலாளிகள் நாட்டையே ஆட்டிவைக்கும் நிலை அடைவார்கள்—ஜனநாயக அரசியலமைப்பு இருந்தால் கூட, இந்த முதலாளிகள் உலகத்தில் மார்க்கட் பிடிக்க நாட்டின் அரசியலைப் பயன்படுத்த நினைப்பர். அதற்காக அதைத் தங்களுக்குள் அடக்கமாக்கிக்கொள்ள முயற்சிப்பார்கள். ஒவ்வொரு நாடும் வெவ்வேறு நாடுகளின் மார்க்கட் பிடிக்கவும், உழைப்பாளிகளின் உழைப்பைச் சுரண்டி அவர்களை அடிமைப் படுத்தவுமே முயலும். அதனால் முதலாளித்வ நாடுகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு பெரும் போர்களை உண்டாக்கி அழிவைத் தேடி ஓடும்.

உற்பத்தி செய்யப்பட்டபொருள்கள் மிஞ்சிப்போய் உதவாக்கரையாகக் கிடக்கின்றன. உழைப்பால் பிழைக்க வேண்டிய தொழிலாளர்கள் வாழ்வுக்கு வழியில்லாமல் வேதனைப்படுகிறார்கள். தொல்லைப் படுந் தொழிலாளர்கள் இன்று ஒன்றுபட்டு ஐக்கிய முன்னணி அமைக்கின்றனர். அதன் வளர்ச்சி அளவுக்கு மீறிவிட்டது. முதலாளித்துவம் தன் முன்னேற்றத்துக்காக உண்டாக்கிய உலகத் தொடர்பு இப்போது அந்தத் தொழிலாளர்களுக்குப் பயன்படுகிறது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்காபோன்ற நாடுகளில் உள்ள தொழிலாளர் வர்க்கம் உலகை உணரத் தொடங்கிவிட்டது. நாடு, சட்டம், மதம் குடும்ப அமைப்பு இவைகள் எல்லாம் முதலாளித்துவ வளர்ச்சிக்கு அடிப்படைகளாகவே அமைந்திருப்பதைத் தெரிந்துகொண்டுவிட்டார்கள் தொழிலாளர்கள் இப்போது.

★

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
25, Tirukkachinambi St., Kancheepuram.